# இறையியல் கோலங்கள்

வடிவம் 31 ஜூலை - டிசெம்பர் 2014 வண்ணம் 2

புனித நிலையை அண்மித்துள்ள அருளாளர் யோசப் வாஸ்ஸின் வாழ்க்கையில் தடைக்கற்கள் படிக்கற்களாக...

ஆன்மீக சமூகப் பணிகளால் ஈழத்தில் மறைவளர்த்த அருளாளர் யோசப் வாஸ்

அருளாளர் யோசப் வாஸ்

வாடகைத் தாய் : ஓர் ஒழுக்க இறையியல் பார்வை

சமூக இசைவாக்கமும் குடும்பமும்

தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL

Vol : 31
No. : 2
July - December : 2014

**வடிவம்** : 31
**வண்ணம்** : 2
**ஜூலை – டிசெம்பர்** : 2014

**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் : அருட்தந்தை மை.ஆ.போ.ற.சவுந்தரநாயகம்

துணை ஆசிரியர்கள் : அருட்தந்தை அ.யோ.ஜெயசீலன்
அருட்தந்தை இ.பெற்றூஸ் தயாபரன்

நிர்வாகக் குழு : அருட்சகோ. றி. ஒ. ரெறன்ஸ்
அருட்சகோ. அ. துஷ்யந்தன்
அருட்சகோ. அ. அல்வின் கிருபாகரன்
அருட்சகோ. வி. அருட்செல்வன்
அருட்சகோ. சூ. அஜித் சுலக்ஷன்
அருட்சகோ.அ.அங்ஸ்ரன் குருஸ்

**Editor** : **Rev.Fr.M.A.P.R.Savundranayagam**

**Sub Editors** : **Rev.Fr.A.J.Jeyaseelan**
**Rev.Fr.I.Petrus Thayaparan**

**Administrative Board** : **Rev.Bro.R.O.Terence**
**Rev.Bro.A.Thushyanthan**
**Rev.Bro.A.Alvin Kirubakaran**
**Rev.Bro.V.Arulchelvan**
**Rev.Bro.S.Ajith Sulaxshan**
**Rev.Bro.A.Angstan Croos.**

**Publication** : **St.Francis Xavier's Seminary**
**Columbuthurai, Jaffna, Sri Lanka.**
**Tel.No.: 021 222 2482, 021 222 7145**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- ஆசிரியர் உரை
- இலச்சினை விளக்கம்
- புனித நிலையை அண்மித்துள்ள அருளாளர் யோசவ்வாஸ்ஸின் வாழ்க்கையில் தடைக்கற்கள் படிக்கற்களாக...
  அருட்கலாநிதி ச.வி.ப. மங்களராஜா
- ஆன்மீக சமூகப் பணிகளால் ஈழத்தில் மறைவளர்த்த அருளாளர் யோசவ் வாஸ்
  திரு.எஸ்.யேசுதாஸ்
- அருளாளர் யோசவ் வாஸ்
  அருட்சகோ.அ.அல்வின் கிருபாகரன்
- வாடகைத் தாய் : ஓர் ஒழுக்க இறையியல் பார்வை
  அருட்தந்தை. தே.ரவிறாஜ்
- சமூக இசைவாக்கமும் குடும்பமும்
  அருட்தந்தை. எஸ்.யே.இராஜநாயகம்
- நத்தார் கவிதைகள்
  எப்படி நிகழும்? – அருட்சகோ.சி.அஜந்தன்
  நந்தார் – புதிய ஒளியும் வாழ்வும் – அருட்சகோ.அ.துஷ்யந்தன்
- Synopsis


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

அருளாளர் யோசப் வாஸ் புனித நிலைக்கு உயர்த்தப்படும் நிகழ்வுக்குரிய ஆயத்தங்கள் பல்வேறு நிலைகளில் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாம் நன்கு அறிவோம்.

இந்நிலையில் இதற்கு தகுந்த விதத்தில் ஆன்மீக ரீதியில் எம்மை ஆயத்தம் செய்வதும், புனித நிலைக்கு உயர்த்தப்படும் அருளாளர் யோசப் வாஸ் அடிகளாரின் வாழ்வும், பணியும் பற்றி அறிந்து கொள்ளவதும் இன்றியமையாததாகும்.

இதற்கு உதவும் வகையில் இந்த இதழின் முதல் மூன்று ஆக்கங்கள் அருளாளர் யோசப் வாஸ்ஸினுடைய வாழ்வையும் பணியையும் சிறப்பாக விளக்கும் ஆக்கங்களாக அமைந்துள்ளன. அத்தோடு கலாபனை நிறைந்த காலங்களில் துணிவோடும், அர்ப்பணத்தோடும் அவர் ஆற்றிய திருப்பணிகள் பற்றியும் தடைகளையும் படிக்கற்களாக மாற்றி எம்மவரின் விசுவாச வாழ்விற்கு புத்துயிர் கொடுத்ததையும் விரிவாக எடுத்துக் கூறுகின்றன.

எம் மறைமாவட்டத்தில் இந்த ஆண்டிலும், குடும்ப மேய்ப்புப் பணியில் தொடர்ந்தும் அக்கறை செலுத்தி, நிறை அன்பை வாழ முயலும் மையங்களாக குடும்பங்களை வளர்த்தெடுக்க முயற்சிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், இறுதி இரண்டு ஆக்கங்களும் குடும்ப வாழ்வோடு தொடர்புடையதாக வெளிக்கொணரப்பட்டிருப்பது இன்னும் பயனுள்ளதாக இருக்கின்றது.

எனவே இவ்விதழின் ஆக்கங்கள் காலத்தின் நிகழ்வுகளோடு எழுதப்பட்டிருப்பது பலருக்கும் பெரிதும் பயன்படும் என்பது எனது நம்பிக்கை.

ஆக்கங்களைக் கவனமுடன் படித்து, பயனுள்ளவற்றைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள இறையாசீர் துணை நிற்பதாக.

அருட்தந்தை மை.ஆ.போ.ற.சவுந்தரநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலச்சினை விளக்கம்



பல இறையியல் ஆக்கங்களை பல வடிவங்களில் வண்ணம் வண்ணமாய் சுமந்து நிற்பதால் இச்சஞ்சிகை 'இறையியல் கோலங்கள்' என்று அழைக்கப்படுகின்றது.

இதன் அடையாளமாக விளங்குகின்ற இலச்சினையின் விளக்கத்தை வாசகர்களாகிய உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம். இதன் மையத்திலுள்ள முக்கோணமானது மூவொரு இறைவனையும், அதனைச் சூழவுள்ள வட்டங்கள் இறை வெளிப்பாட்டையும் மனித ஞானத்தையும் குறிக்கின்றன.

மூவொரு இறைவனை நாம் எமது மனித ஞானத்தால் புரிந்து கொள்ளவோ விளக்கிக் கூறவோ முடியாது. எங்கும் பரந்துள்ள பரம்பொருளாகிய மூவொரு இறைவன் மனித புத்திக்கு அப்பாற்பட்டவர் என்பதை உணர்த்தவே இம்முக்கோணம் வட்டங்களைத் தாண்டி வெளியே நிற்கின்றது.

மனித ஞானத்தைக் குறிக்கும் இந்த வட்டங்களும் பூரணமான வட்டங்களாக இல்லை. அவை அங்கங்கே தொடுக்கப்படாமல் இருக்கின்றன. இறைவன் தன்னை முற்றும் முழுதாக கிறிஸ்து இயேசுவில் வெளிப்படுத்தியபோதும் வரையறைக்குட்பட்ட மனித ஞானத்தைக் கொண்டு நாம் மூவொரு இறைவனையும், அவருடைய வெளிப்படுத்தல்களையும் முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாது என்பதையே இவ்விலச்சினை குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நிலையை அண்மித்துள்ள அருளாளர் யோசப் வாஸ்ஸின் வாழ்க்கையில் தடைக்கற்கள் படிக்கற்களாக..........



அருட்கலாநிதி ச.வி.ப. மங்களராஜா
விரிவுரையாளர்,
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை.

நாம் பல்வேறு பணிகளை ஆற்றுவதற்குத் திட்டமிட்டு முன்நகர்ந்து செல்லும் போது சில வேளைகளில் பெரும் முட்டுக்கட்டைகள் ஏற்படுவது முண்டு. நல்லதொரு குறிக்கோளை அடைவதற்குப் போட்ட திட்டங்கள் இப்படியாகத் தடைப்பட்டுவிட்டனவே என்று ஏமாற்றமடைவதுண்டு. சிலசந்தர்ப்பங்களில் இறைவன் ஏன் இப்படியான நல்லதிட்டத்தை முன்னகர விடாமல் தடுக்கின்றார் என்று எமது இறைநம்பிக் கைகளில் தளர்ச்சியடைவதுமுண்டு. இப்படியாகத் திட்டங்கள் துண்டுதுண்டாகத் தவிடுபொடியாகும் வேளையிலும் உடைந்த துண்டுகளிலிருந்து ஒரு ஒளிக்கீற்று தென்பட்டு ஏற்கனவே திட்டமிட்ட குறிக்கோளைவிடச் சிறந்ததொரு குறிக்கோளை அடைய வழியொன்று பிறக்க இறைவனின் பராமரிப்பு எம்மை வழிநடத்துவதையும் உணரலாம். இதற்குத் திருவிவிலியத்திலும் புனிதர்களின் வரலாற்றிலும் குறிப்பாக எங்கள் நாட்டின் பாதுகாவலரும் விரைவில் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவிருக்கும் அருளாளர் யோசப்வாஸ் அடிகளாருடைய வாழ்விலும் நிறைய உதாரணங்கள் உண்டு.

## திருவிவிலியத்தில்

தாவீது அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது ஆண்டவர் இறைவாக்கினர் சாமுவேல் வழியாகக் கூறிய **"மனிதர் பார்ப்பதுபோல் நான் பார்ப்பதில்லை"** (1சாமுவேல் 16:16) என்ற வார்த்தைகள் கடவுளுடைய செயற்பாடுகள் மனிதனால் புரிந்து கொள்ளப்படமுடியாமலும் சிலவேளைகளில் மனிதருக்கு விசித்திரமானவையாக இருந்தாலும் எவ்வாறு தூரநோக்கில் அவை பயனுள்ளவையாக இருக்கின்றன என்பதையும் பல நிகழ்வுகள் காட்டுகின்றன. ஆதியாகமத்தில் யோசேப்பு அடிமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்கப்பட்டமையும் (தொ நூ 27) பின்னர் அவர் அதிகாரம் பெற்று தனது சகோதரருடனும் தந்தையுடனும் இணைவது (தொ நூ 41-46) ஆகிய நிகழ்வுகள் வாழ்க்கையில் ஏற்படும் துயர நிகழ்வுகளூடாகக் கடவுளின் திட்டம் எவ்வாறு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது என்பதற்கு ஒரு நல்ல உதாரணம்.

**புனிதர்கள் வாழ்வில்**

சில புனிதர்களது வாழ்விலும் அவர்கள் திட்டமிட்டதற்கு மாறாக ஏற்பட்ட திருப்பங்களினால் அவர்கள் ஏமாற்றமடைந்ததாக உணர்ந்தாலும் திடீர் மாற்றத்தால் ஏற்பட்ட புதிய வாழ்க்கை முறையில் அவர்களது இறைநம்பிக்கையால் வியத்தகு செயல்கள் நிகழ்ந்தமையை அவதானிக்கலாம். உலகனைத்திலும் குறிப்பாக நமது நாட்டிலும் பிரபல்யமான புனித பதுவை அந்தோனியாருடைய (1195-1234) வாழ்க்கை இதற்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டு. போர்த்துக்கல்லின் லிஸ்பன் நகரில் பிறந்த இவர் முதலில் ஒரு அகுஸ்தீனிய சபைத் துறவியாகத்தான் தமது வாழ்க்கையைத் தொடங்கினார். ஒரு தடவை வட ஆபிரிக்காவின் மொறொக்கோ எனும் இடத்தில் மறைப்பணியாற்றி மறைசாட்சிகளாக உயிர் துறந்த சில பிரான்சிஸ்கன் சபைத் துறவிகளுடைய உடல் எச்சங்கள் பவனியாக நகர் வீதிகள் வழியாக ஆடம்பர பவனியாக எடுத்துச் செல்லப்பட்டதை இளம் துறவியாகிய அந்தோனியார் அவதானித்தார். அப்போதே தானும் ஒரு மறைசாட்சியாகக் கிறிஸ்துவுக்காகத் தமது உயிரைத் தியாகம் செய்ய வேண்டும் என்றும் அதற்குரிய ஒரே வழி தானும் பிரான்சிஸ்கன் சபையில் சேர வேண்டுமென்றும் அவ்வாறு சேர்ந்தால்தான் வட ஆபிரிக்காவிற்கு ஒரு மறைப்பணியாளராகச் செல்ல முடியும் என்றும் கருதி பிரான்சிஸ்கன் துறவற சபையில் இணைந்து கொண்டார். மறைசாட்சியாவதற்கென மறைப்பணியாளராக ஆபிரிக்காவிற்குப் பயணம் மேற்கொள்ள வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. ஆனால் கடும் சுகவீனம் காரணமாக மறைப்பணியாற்ற முடியாமல் திரும்பி வர நேர்ந்தது. மறைசாட்சியாவது என்ற திட்டம் கானல் நீரானது. திரும்பி வரும்போது கடும் புயல் காற்றுக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக இவர் பயணித்த கப்பல் போர்த்துக்கல் செல்வதற்குப் பதிலாக தெற்கு இத்தாலியில் உள்ள சிசிலித்தீவில் கரையொதுங்கியது. அங்கிருந்து அசிசி நகர் சென்று பின்னர் போர்லி எனும் இடத்தில் நடந்த குருப்பட்ட நிகழ்வின் போது தற்செயலாக இவர் மறையுரை வழங்க அழைக்கப் பட்டதிலிருந்து தலைசிறந்த மறையுரைஞராக அங்கீகரிக்கப்பட்டமையும் பின்னர் பதுவை நகரிலும் சுற்றுப்புறத்திலும் குறுகிய காலத்தில் தமது மறையுரைகளாலும் புனித வாழ்வாலும் பல நூற்றுக்கணக்கான பாவிகளை மனம் திருப்பியதும் பல பேதகக் கொள்கைகளைப் பின்பற்றியோரைச் சரியான திருச்சபையின் படிப்பினைகளை ஏற்கச் செய்தமையும் வரலாற்று உண்மைகள். இவ்வாறாக மறைசாட்சியாக விரும்பியவர் இறைவனின் வியத்தகு செயலால் மறையுரைஞராக அரும்பணியாற்றி புனிதரானார்.

இலங்கையின் அப்போஸ்தலராகிய அருளாளர் யோசப் வாஸினுடைய வாழ்க்கையிலும் அவர் தமக்கென்று சில செயல்திட்டங்களை வகுத்திருந்தாலும் தடைகள் பல அவ்வப்போது குறுக்கீடு செய்த வண்ணமிருந்தன. எனினும் அவர் இறை பராமரிப்புக்கு முன்னுரிமை கொடுத்துச் செயல்பட்டமைக்குச் சான்றாக நிறைய நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன.

**இலங்கைக்கு அழைப்பு**

1676ம் ஆண்டு யோசப் வாஸ் அடிகள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அத்துடன் அவருக்கு மறையுரை யாற்றவும் பாவசங்கீர்த்தனம் கேட்கவும் அதிகாரமும் வழங்கப்பட்டது. கோவாவில் அந்நாட்களில் புதிதாகக் குருப்பட்டம் பெறுகிறவர் களுக்குப் பங்கு மேய்ப்புப் பணிப் பொறுப்பு உடனடியாக வழங்கப் படுவதில்லை. சிலவேளைகள் அங்கு குருக்கள் பலர் இருந்தமையால் புதிய குருக்கள் நீண்ட காலம் பணிப் பொறுப்புக்கள் எதுவுமின்றி இருக்க வேண்டியிருந்தது. மேய்ப்புப்பணிப் பொறுப்பெதுவுமின்றி சோம்பியிருப் பதை வாஸ் அடிகள் விரும்பவே யில்லை. எனவே அவர் தாம் பிறந்த ஊராகிய சங்குவாலிக்கு வந்தார். அவ்வூர்ப் பங்குக் குருவுக்கு ஏதோ ஒரு வகையில் உதவலாம் என்று அங்கு சென்றார். அங்கு குருத்துவ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்தலைத் தேர்ந்தெடுக்கும் பையன்களுக்கு லத்தீன் கற்பித்தார். அவரது மாணவர்களுள் ஒருவர் யோசப் கார்வாலோ எனும் அவரது மருமகன். இவர் பின்னர் குருவாகி இலங்கைக்கு அவரது உதவி புரிய வந்தவராவார். இது போன்ற கற்பித்தல் பணிகள் பயனுள்ளவையாக இருந்தாலும் யோசப் வாஸ் அடிகளாரின் ஆன்ம தாகத்தை முழுமையாக நிறைவு செய்வதாக இருக்கவில்லை.

இந்நாட்களில் தூர கிழக்கில் உள்ள போர்த்துக்கேய ஆட்சிப் பகுதிகளில் ஒன்றாகிய மக்காவோவிற்கு பணி நிமித்தமான தரிசிப்பை முடித்துக் கொண்டு வந்த கோவா பேராலய பிரதம குருவானவர்களுள் ஒருவரை வாஸ் அடிகளார் சந்தித்தார். இவர் பயணித்த கப்பல் புயல் காற்று காரணமாக கொழும்புத்துறைமுகத்தில் சற்றுத் தரித்து நிற்க வேண்டியேற்பட்டது. அப்போது கொழும்பில் இருந்த கத்தோலிக்கர் சிலர் கப்பலில் ஒரு கத்தோலிக்க குருவும் உள்ளார் என்பதை கேள்வியுற்றதும் உடன் கப்பலுக்குள் வந்து தமது ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்ததுடன் இலங்கைத் தீவில் அப்போது பல வருடங்களாக கத்தோலிக்கர் திருவருட்சாதனங்கள் இன்றி இருக்கும் பெரும் குறையை விளக்கிக் கூறினர். பரிதாபத்துக்குரிய இலங்கைக் கத்தோலிக்கரது நிலை வாஸ் அடிகளாரது உள்ளத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. மறுபக்கத்தில் தாம் இங்கு 'பணியின்றி' இருக்கும் நிலைமை ஆயனின்றி ஆடுகளாக இருந்த இலங்கைக் கத்தோலிக்கர் மத்தியில் பணி செய்யச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

**இலங்கைப் பணிக்கான ஆயத்தம்**

இலங்கைக்குச் சென்று மறைப்பணி புரிவதில் உள்ள ஆபத்துக்களை முழுமையாக உணராவிட்டாலும் நீண்ட செபத்தின் பின்னும் மூத்த குருக்கள் சிலரின் ஆலோசனையுடனும் இலங்கைக்கு மறைப்பணியாற்றச் செல்ல வேண்டுமென்று ஆர்வம் மேலும் உறுதியடைந்தது. இந்த ஆபத்து நிறைந்த பணிக்குத் துணையாக வேறு எந்தக் குருக்களும் முன்வராத நிலையில் தாமே தனியாக அப்பணிக்குச் செல்லத் தீர்மானித்தார். அந்நேரத்தில் கோவா பேராயரின் பதவி காலியாக இருந்தமையால் மறை மாவட்ட உயர் நிர்வாக சபையிடம் சென்று இலங்கைக்குத் தாம் மறைபணியாளராகச் செல்லத் தமக்கிருந்த விருப்பத்தைத் தெரிவித்தார். வாஸ் அடிகள் இவ்வாறு பணியாற்ற முன்வந்தமை நிர்வாக சபைக்கு மகிழ்ச்சியளித்தது. அவர்களது மகிழ்ச்சிக்குக் காரணம் ஆபத்து நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மறைப்பணிக்கு ஒருவர் முன்வந்தமையல்ல. மாறாக அந்நேரத்தில் பல பிரச்சினைகள் நிறைந்த கன்னரா மறைத்தளத்தில் பணியாற்ற மறைப்பணியாளர் யாராவது கிடைக்க மாட்டார்களா என்று தாம் எதிர்பார்த்த நேரத்தில் வாஸ் அடிகள் ஏதோ ஒரு இடத்திற்கு மறைப்பணியாற்ற முன் வந்தமையால் அவரை கன்னராவுக்கு அனுப்பலாம் என்று கருதியமையால் தான். எனவே கோவா பேராயரின் கன்னராவுக்கான பிரதிநிதியாக வாஸ் அடிகள் அங்கு செல்ல பணிக்கப்பட்டார். இப்பணிப்புரை வாஸ் அடிகளாரின் உத்தேச இலங்கைப் பணிப்பயணத்தில் ஒரு முட்டுக்கட்டையாக உணரப்பட்டது. இப்படியான இக்கட்டான சந்தர்ப்பங்களில் வாஸ் அடிகள் வழமையாகச் செய்வது போல தனது ஆன்ம குருவின் ஆலோசனையை நாடினார். தூரநோக்குடைய அவரது ஆன்மீகக் குரு இப்பணிப்புரையை ஏற்கும்படி வாஸ் அடிகளிடம் கூறினார். கன்னராப் பிரதேசம் அப்போது கொழும்பிலிருந்து நிர்வகிக்கும் ஒல்லாந்தருடைய ஆட்சியின் கீழ் இருந்தது. எனவே கன்னரா சென்று பணியாற்றுவதால் இலங்கைக்குள் பாதுகாப்புடன் நுழைவதற்கான வழிமுறையை வகுக்கலாம் என்று வாஸ் அடிகளுக்கு உணர்த்தப்பட்டது. இந்த எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. கன்னராவில் பணியாற்றியபோது பிற்காலத்தில் பயன்தரக்கூடிய மிகச்சிறந்த மேய்ப்புப் பணியனுபவத்தைப் பெற்றதுடன் அங்கிருந்த போது மங்களூரிலிருந்து கொண்டு கன்னராவை நிர்வகித்த ஒல்லாந்த அரச அலுவலர்களைப் பற்றி அறியக்கூடியதாயிருந்தது. இவர்களுடைய தலைமைப்பீடம் கொழும்பில் தான் இருந்தமையால் அவ்வப்போது வாஸ் அடிகளாரால் இலங்கையின் களநிலையை அறியக்கூடியதாயும் இலங்கைக்குப் பாதுகாப்பாக ஒரு கத்தோலிக்க குரு செல்வதற்கான வழிவகைகளையும் ஆராயக்கூடியதாயுமிருந்தது.

**மீண்டும் ஒரு தடையும் முன்நோக்கிய நகர்வும்**

கன்னராவில் மிகச்சிறப்பாகப் பணியாற்றிய பின் 1684ல் கோவா திரும்பிய போது அடிகளாருக்குப் பெரும் ஏமாற்றம் காத்திருந்தது. கோவா உயர் மறைமாவட்ட நிர்வாக சபையிடமிருந்து அடிகளாருக் குச் சிறப்பான வரவேற்புக் கிடைக்கவில்லை. அங்கு நிலவியிருந்த ஆட்சியதிகார சர்ச்சையை வாஸ் அடிகளார் சமரசத்திற்குக் கொண்டு வந்த விதத்தையும் கோவாப் பேராயர் 31.01.1684 திடீரென இறந்த போது வாஸ் அடிகள் அவசராமாகத் திரும்பி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தமையும் நிர்வாக சபை விரும்பவில்லை. எனவே அடிகள் முன்னரைப் போல குருத்துவப்பணிப் பொறுப்பெதுவும் வழங்கப்படாத நிலையில் இருக்க வேண்டியிருந்தது.

இந்நிலையில் இலங்கை செல்லும் திட்டங்களைப் பற்றிச் சிந்தித்து எதிர்பார்ப்புடனிருந்த வேளையில் இரு போர்த்துக்கேய மொழி பேசும் மறையுரையாற்றும் துறவு சபையொன்றைச் சேர்ந்த குருக்கள் அவ்விடம் வந்து சேர்ந்தனர். இவர்கள் மகாஞானொடுக்க மறையுரைகள் வழங்கும் போது அவற்றை கொங்கணி மொழியில் மொழிபெயர்க்க வாஸ் அடிகளாரின் உதவியை நாடினர். முன்னதாக பேராயரின் பிரதிநிதியாகப் பல குருக்களுக்குப் பொறுப்பான நிலையில் பணிபுரிந்து வந்த வாஸ் அடிகளார் தற்போது தாழ்ச்சியுடன் இரண்டு மகாஞானொடுக்க போதகர்களுக்கு மொழிபெயர்பாளராக மட்டும் பணிபுரிய இணங்கினார்.

புனிதத்துவம் பெரிய பெரிய காரியங்கள் செய்வதில் தங்கியிருப் பதில்லை. அது சின்னஞ் சிறு விடயங்களையும் பெரிய மனதுடன் மகிழ்வுடன் செய்வதில் தங்கியுள்ளது. வாஸ் அடிகள் இங்கு மொழிபெயர்ப்பாளராக ஆற்றிய பணி இக்கூற்றை உறுதிப்படுத்துகின்றது. அவ்விடத்து இறை மக்கள் மட்டுமன்றி அவ்விரு மறையுரைஞர்களும் அவரது சிறப்பான பணியாலும் அதற்கும் மேலாக அவரது புனிதமான வாழ்க்கையாலும் கவரப்பட்டனர். இந் நாட்களில் வாஸ் அடிகள் கொங்கணி மொழியில் திருச்சிலுவைப் பாதைத் தியானங்கள் என்ற தொகுப்பை ஆக்கினார். பின்னர் இலங்கையில் இதனைத் தமிழில் மொழி பெயர்த்தார். இப்பணி வாஸ் அடிகளாரின் தாழ்ச்சி எனும் புண்ணியத்தை நன்கு புடமிடப்பட்டது. இலங்கையில் அடிகளாரின் பணி வெற்றிகரமாக நீடித்து நிற்க ஏற்ற அடித்தளத்தை இப்பணி இட்டதெனலாம். இந்தப் பணியில் ஈடுபட்ட போதுதான் ஒரு குழுமமாக துறவு வாழ்க்கை வாழத் தீர்மானித்த ஒரு மறைமாவட்ட குருக்களின் அமைப்பையும் வாஸ் அடிகள் சந்திக்க நேர்ந்தது. பிற்காலத்தில் இந்த அமைப்புத்தான் வாஸ் அடிகள் இலங்கையில் ஆரம்பித்த பணியை 200 ஆண்டுகளுக்கு மேலாக முன்னெடுத்துச் சென்றது.

வாஸ் அடிகள் ஒரு தனிமனிதராகவும் அவரது இலங்கை மறைப்பணித் திட்டம் அவருடைய தனிப்பட்ட திட்டமாக மட்டுமே இருந்தது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கைகொடுத்துதவும் படி அவர் தொடர்பு கொண்டகுழுக்களிடமிருந்து எதுவித ஆதரவும் அவருக்குக் கிடைக்கவில்லை. எனவே ஒருவேளை அவர் ஒரு தனிமனிதராக அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று பணியாற்றி சிலவேளை அரும்பெரும் பணியாற்றக் கூடியதாயிருந்தாலும் அவருடைய காலத்திற்குப் பின் அப்பணியை முன்னெடுத்துச் செல்ல ஒருவருமில்லாது அம்மறைப்பணி அத்துடன் நின்றுவிட்டிருக்கும். இக்கட்டான இந்நிலையிலிருந்து பணியில் ஒரு தொடர்ச்சியை ஏற்படுத்த ஒரேயொரு வழி இருந்தது. அதன்படி அவர் ஒரு துறவற சபையில் சேரவேண்டும். பின் அச் சபையின் உறுப்பினராக இலங்கை செல்ல வேண்டும். அப்போது தான் அச்சபை மேலும் மறைப்பணியாளரை வாஸ் அடிகளாருக்கு உதவியாகவும் அவருக்குப் பின்னும் அப்பணி தொடர மேலும் மறைப்பணியாளரை அனுப்பவும் வாய்ப்பு ஏற்படும். இதனால் தான் ஆபத்து நிறைந்த இலங்கைப் பணியில் ஒரு தொடர்ச்சியை உறுதிப்படுத்தலாம். ஆனால் அந் நாட்களில் இந்தியாவில் இருந்த துறவற சபைகள் சுதேச இந்தியர்களைத் தமது உறுப்பினராக ஏற்றுக் கொள்ளத் துவங்கவில்லை.

அந் நாட்களில் கோவாவில் பாஸ்குவால் டி கொஸ்தா ஜெரமியாஸ் எனும் பக்தியுள்ள ஒரு வயதான குரு இருந்தார். இவர் நற்செய்தி அறநெறிகளைப் பிரமாணிக்கமாகக் கடைப்பிடித்து வாழ ஒரு துறவற சபையில் இணைந்து வாழத் தணியாத ஆவல் கொண்டிருந்தார. அந் நாட்களில் இந்தியர்கள் துறவற சபைகளில் இணைக்கப்பட முடியாத நிலையிலிருந்ததால் இவர் ஒரு துணிச்சலான நடவடிக்கையாகத் தாமே ஒரு துறவற சபையை ஆரம்பிக்க முடிவெடுத்தார். அவ்வாறே ஒரு துறவற சபையை ஆரம்பித்து, இன்னும் மூவரையும் அதில் உறுப்பினராக இணைத்துக் கொண்டார். இச்சபையின் ஆரம்பம் மிகவும் கடினமானதாகவும், எளிமையானதுமாயிருந்தது. இச் சபையின் ஆரம்ப உறுப்பினராக மூன்று மறைமாவட்டக் குருக்களும் உபதியாக்கோன் நிலையிலிருந்த ஒருவரும் உலக சந்தடிகளிலிருந்து விலகி சபைக்கென்று அங்கீகாரம் பெறாத நிலையிலும் நற்செய்தி அறநெறிகளைப் பிரமாணிக்கமாகக் கடைப்பிடித்து ஒரு துறவற சமூகமாக வாழத்துவங்கினர்.

இறை பராமரிப்பினால் முன்னர் மகாஞானொடுக்கத்தின் போது மொழிபெயர்ப்பாளராக வாஸ் அடிகள் பணியாற்றிய போது இந்த சபையைத்தான் வாஸ் அடிகள் சந்திக்க நேர்ந்தது. இந்த அமைப்பினூடாகத்தான் இறைவன் கரம் செயல்பட்டது. அத்துடன் இலங்கைத் திருச்சபையின் இருப்பும், வளர்ச்சியும் இந்த சபையில் தான் தங்கியிருந்தது.

ஏற்கனவே வாஸ் அடிகளாரைப் பற்றி மேலோட்டமாக அறிந்திருந்த இந்த புதிய துறவற சபையினர் அவர் இச்சபையில் சேர்ந்த சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களிலேயே அவரது புனித வாழ்வையும் ஆன்மீக தாகத்தையும் பற்றி நன்கு அறிந்து கொண்டனர். தமது வயது முதிர்ச்சி காரணமாக பாஸ்குவால் அடிகள் வாஸ் அடிகளாரைச் சபையின் முதல்வராகும் படி பரிந்துரைத்ததன் படி முதல்வர் பொறுப்பை அவர் ஏற்கவேண்டியதாயிற்று. வாஸ் அடிகளும் துரிதமாகச் செயல்பட்டு இச்சபை ஆன்மீகத்திலும் பொருளாதாரத்திலும் தனது சொந்தக் காலிலேயே நிற்கச் செய்வதில் வெற்றி கண்டார். ஆறு மாதங்கள் செல்ல இச்சபை புனித பிலிப்பு நேரியாரின் தியான சம்பிரதாய (ஓரட்டோரியன்) சபையின் ஒரு இணை சபையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தனது உள்ளத்தில் உள்ள இலங்கை மறைப்பணியை மேற்கொண்டு செல்ல இச்சபை பக்க பலமாக இருக்கும் என்பதை உறுதி செய்து கொண்டார். அதன்பின் தனது இறுதிப் பயண இலக்கு எது என்று வெளிப்படுத்தாது தனக்குத் துணையாக போல் டி சூசா அடிகளாரையும், ஸ்ரீபன் சிக்குவேரா எனும் அருட்சகோதரரையும் தனது குடும்பத்தின் பிரமாணிக்கமுள்ள பணியாளனாகிய யோண் என்பவரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

**பணிக்கு உதவ வந்தவர்கள் பின்வாங்கல் அதனால் ஏற்பட்ட நன்மை**

வாஸ் அடிகளும் மற்ற மூவரும் கன்னரா பகுதியூடாகப் பயணித்தார்கள். அங்கு இவர்கள் ஆறு மாதமளவில் பல்வேறு இடங்களில் மறைப்பணியாற்றிக் கொண்டு சென்றனர். இறுதியில் தெல்லிச்சேரி எனும் இடத்தில் தான் தமது பயணத்தின் இறுதி இலக்கு எது என்பதை வாஸ் அடிகள் மற்றவர்களுக்கு வெளிப்படுத்தியபோது அவர் ஏமாற்றத்தை எதிர்கொண்டார். இரு மறைப்பணியாளரும் ஆபத்து நிறைந்த இலங்கைப் பணிக்கு தாம் தயாரில்லையென்று கூறி பின்வாங்கி தம் சொந்த இடம் திரும்பினர். வாஸ் அடிகளோ தாம் முன்வைத்த காலைப் பின் வைக்க விரும்பவில்லை. தமது பிரமாணிக்கமுள்ள ஊழியன் யோணுடன் பயணத்தைத் தொடரலானார். இந்நிகழ்வு வாஸ் அடிகளுக்கு அப்போதைக்குப் பெரும் பின்னடைவாகவும், ஏமாற்றமாகவும் இருந்தாலும் பின் இடம்பெற்ற நிகழ்வுகளைப் பார்க்கும் போது இதுவும் ஒரு நன்மைக்கே எனவும் இதிலும் இறை பாரமரிப்பு இருந்தமையையும் காணக்கூடியதாக விருந்தது. நான்கு பேர் கொண்ட ஒரு பெரிய குழு ஒல்லாந்தருடைய பல்வேறு இடங்களில் உள்ள நுழைவாயில்களில் இருந்த கடுமையான பரிசோதனைகளைத் தாண்டி செல்வது மிகவும் சிரமமாக இருந்திருக்கும். அத்துடன் அவர்கள் யார் என்பதும், பயண நோக்கம் என்பனவும் வெளிவந்திருக்கக் கூடிய ஆபத்தும் அதிகமாக இருந்திருக்கும் என்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரக்கூடியதாக இருந்தது. வாஸ் அடிகளும் யோனும் ஆபத்து நிறைந்த ஒல்லாந்தருடைய பயணச் சோதனைக் கெடுபிடிகளுடாகச் சுலபமாகச் செல்லக் கூடியதாயிருந்தது. மூன்று மறைப்பணியாளரும் கைது செய்யப்பட்டு மறியலில் அடைக்கப்படுவதை அல்லது நாடு கடத்தப்படுவதை விட வாஸ் அடிகளும் யோனும் இலங்கைக்குள் செல்லக்கூடியதாக இருந்தமை உண்மையில் இறை பராமரிப்புத்தான்.

**யாழ்ப்பாணத்தில் சோதனைகளும் தடைகளும் மறைப்பணிக்கு அடித்தளங்களாக .....**

சாதாரண காலநிலை நிலவும் நாட்களில் தூத்துக்குடியில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கான பயண நேரம் அந்நாட்களில் மூன்று அல்லது நான்கு நாட்கள் மட்டுமே. ஆனால் எதிர்பாராதவிதமாக வீசிய புயற்காற்றினால் அவர்கள் பயணித்த கப்பல்கள் பலநாட்கள் கடலில் அலைக்கழிக்கப்பட்டது. குடிதண்ணீர் உட்பட அவர்கள் வசமிருந்த உணவுப்பொருட்கள் எல்லாம் தீர்ந்துவிட்டன. பயணம் ஆரம்பித்து இருபது நாட்களுக்குப் பின் பசியாலும் களைப்பாலும் சோர்ந்தவர்களாக யாழ்ப்பாணத்திற்குப் பதிலாக அவர்களது கப்பல் மன்னார் சென்றடைந்தது.

மன்னாரில் இந்தக் கப்பல் வந்து சேர்ந்தது தற்செயலாக நடந்தது ஒன்றாக இருந்தாலும் இதில் பயணித்தவர்கள் பரிதாபத்திற்குரிய நிலையில் பலவீனமடைந்து சோர்வுற்ற நிலையிலிருந்தமையாலும் மன்னாரில் நிலைகொண்டிருந்த ஒல்லாந்த அதிகாரிகள் இவ்விருவரையும் தமது பிரதேசத்திற்கு 'வர உரிமையில்லாத குடியேறிகள்' என்று சந்தேகிக்க வில்லை. எனவே இந்தக் கடற்கொந்தளிப்பும் இவ்விருவருடைய அவல நிலையும் இறைவன் இவர்களுக் வழங்கிய ஒரு பாதுகாப்பு அரண் போலவே இருந்தது.

உடல்நிலை ஓரளவு தென்படைவதற்கு மன்னாரில் இவர்கள் சிலநாள் தங்க வேண்டியயிருந்தது. இவர்கள் கொண்டுவந்த உணவுப்பொருட்களெல்லாம் தீர்ந்துவிட்ட படியால் வீடுவீடாகச் சென்று பிச்சையெடுத்துண்ண வேண்டியிருந்தது. பின்னர் இவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். இவர்கள் யாழ்ப்பாணம் வந்த போது இலங்கையில் வேறு ஒரு துறையில் இருந்து வந்தவர்களாகக் கருதப்பட்டமையால் ஒல்லாந்தர் இவர்களை தீவிர பரிசோதனைக்குட்படுத்தவில்லை.

இவர்கள் எவ்வளவுக்கு உடல் இளைப்பு, பசி, நோய்கள் ஆகியவற்றை அனுபவித்தார்களோ அவ்வளவிற்கு இவர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளடையாளங்களை உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறைந்திருந்தன. இவர்களுடைய அவலங்கள் குறைவதாக தென்பட வில்லை. வாரக்கணக்கில் போதிய உணவின்றியும் பட்டினியாயும் இருந்தமை, முறையான தங்குமிட வசதிகளின்மை, உடல் வருத்தம் தரும் பயணங்கள் ஆகியவை ஒரு கட்டத்திற்கப்பால் இவர்களை இயங்கவிடாமல் தடுத்தன எனலாம். ஏற்கெனவே வாஸ் அடிகள் ஒரு திடகாத்திரமான உடல் வாகுடையவர் என்று சொல்லமுடியாது. எனவே அவர் அந்நாட்களில் யாழ்ப்பாணத்தில் எல்லோரும் அஞ்சும் ஒரு வியாதியாகிய வயிற்றுப் போக்கிற்கு (வாந்திபேதி) ஆளானார். சில நாட்களின் பின் அவரது ஊழியனாகிய யோணும் அதே நோய்க்குள்ளாகி அவருக்கருகிலேயே படுத்திருக்க வேண்டியேற்பட்டது. பலவீனமடைந்து எழுந்து நடமாட முடியாதிருந்த இவ்விருவரது பரிதாபக் காட்சியைப் பார்த்த இரக்க உள்ளம் கொண்ட ஒரு பெண்மணி இவர்களுக்கு அவ்வப்போது அரிசிக்கஞ்சி கொண்டு வந்து கொடுத்து வந்தாள். இதனால் இவர்கள் ஓரளவு நலம்பெற்றுத் தென்படைந்து எழுந்து நடமாடக்கூடிய நிலைக்கு வந்தார்கள். இவ்விருவரும் இந்தியாவிலிருந்து பிழைப்புத் தேடி யாழ்ப்பாணம் வந்து கூலித் தொழிலாளிகளாக வேடமிட்டு வந்தவர்கள் இப்போது எதுவித நாதியுமற்ற பிச்சைக்காரராக மாறினார்கள். யாழ் குடாநாட்டில் உடல் நலமுள்ளவர்களாக இடத்துக்கிடம் வேலை தேடி அலைபவர்களிலும் பார்க்க பிச்சைக்காரராகத் திரிந்ததால் இவர்கள் மீது ஒல்லாந்த அதிகாரிகளது சந்தேகப் பார்வை பதியவில்லை. வாஸ் அடிகள் வீடு வீடாகச் சென்று பிச்சையெடுத்தமை கடுமையான வயிற்றுப்போக்கால் படுக்கையை விட்டு எழமுடியாதிருந்தமை ஆகிய அனுபவங்கள் மிகவும் உளத்திற்கும் உடலுக்கும் வேதனை தரும் அனுபவங்களாக இருந்தாலும் பிற்காலத்தில் இவரது பணிக்கு குறிப்பாக கண்டியில் கொள்ளை நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் அயராது துணிவுடன் பணி புரிய வேண்டிய தயாரிப்பாக அமைந்தது.

**கிறிஸ்மஸ் குரு வேட்டையும், பணி விரிவடைதலும்**

கத்தோலிக்கரது முகபாவங்களில் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்கும் முகமாக கழுத்தில் செபமாலை அணிந்தவராக பிச்சையெடுத்து வந்தார். இதனால் சிலவேளைகளில் கல்வினிஸ்டுகளின் வீடுகளில் ஏளனம் செய்யப்பட்டும் வந்தார். ஆனால் இவ்வழிமுறையால் கத்தோலிக்கர் வாழும் வீடுகளை அடிகளாரால் கண்டு பிடிக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வீட்டில் கத்தோலிக்கர் வாழ்கின்றனர் என்று நன்கு உறுதிப்படுத்தியபின் அவ்வீட்டாருக்கு வாஸ் அடிகள் தாம் ஒரு கத்தோலிக்க குரு என்பதை வெளிப்படுத்தினார். கத்தோலிக்க குடும்பங்கள் மத்தியில் ஒரு குரு தம் மத்தியில் வந்துள்ளார் என்ற செய்தி பரவவே அடிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பை அவர்கள் மேற்கொண்டனர். குடாநாட்டில் சில்லாலை எனும் ஊர் அநேகமாக முழுமையாக கத்தோலிக்கரைக் கொண்ட ஊராகவும், சிறிது ஒதுக்குப் புறமாக அமைந்த ஊராகவும், ஒழுங்கைகளும் குறுக்கு வீதிகளும் நிறைந்து காணப்பட்டதால் புதிதாக வரும் ஒருவர் ஒரு வீட்டைக் கண்டுபிடிக்க மிகுந்த சிரமப்படும் சூழ்நிலை இருந்தமையாலும் இந்த ஊர் வாஸ் அடிகள் தங்கியிருக்க ஏற்ற ஊராக கத்தோலிக்கப் பெரியவர்களால் தீர்மானிக்கப்பட்டது. அங்கிருந்து இரவு வேளைகளில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் மறைமுகமாக வாழ்ந்த கத்தோலிக்க சமூகங்களைத் தரிசிக்கவும் அவர்களது ஆன்மீகத் தேவைகளைக் கவனிக்கவும் திருப்பலியொப்புக்கொடுக்கவும் அழைத்துச் செல்லப்பட்டார். இவ்வாறாக இரண்டு வருடப்பணியினால் யாழ் குடாநாட்டில் மறைமுகமாக நிகழ்ந்து கொண்டிருந்த கத்தோலிக்க சமய மறுமலர்ச்சி சிறுகச் சிறுக வெளியேயும் தெரியத் தொடங்கியது. ஒல்லாந்த அதிகாரிகளும் இந்தக் கத்தோலிக்கப் புத்தெழுச்சியை அவதானிக்கத் தவறவில்லை. இதன் பின்னணியில் குருக்கள் சிலராவது இரகசியமாக வந்து பணியாற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்று சந்தேகித்தனர். அதே வேளையில் வாஸ் அடிகள் திட்டமிட்ட இலங்கைப் பணியில் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருந்தது. யாழ்ப்பாணக் குடாநாடு தவிர்ந்த நாட்டின் எஞ்சிய பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையான கத்தோலிக்கர் குருக்களின்றி, ஆன்மீக கவனிப்பின்றி திருவருட்சாதனங்களின்றி 33 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து மற்றப் பகுதிகளுக்கும் வாஸ்அடிகளாரின் பணி கிடைக்கச் செய்ய ஒரு அதிரடியான நிகழ்வின் வழியாக இறைபராமரிப்பு செயல்பட்டது. இந்நிகழ்வு குடாநாட்டில் வாஸ் அடிகளின் பணிக்கு ஒரு பின்னடைவு போலத் தென்பட்டாலும் இதன் போது குடாநாட்டின் முக்கியமான பொது நிலையினர் சிலர் தமது விசுவாசத்தைக் காக்க மறைசாட்சிகளானமை அவர்களின் முதிர்ச்சியை வெளிப்படுத்தியது. அத்துடன் வாஸ் அடிகள் தற்போது நாட்டின் மற்றப் பகுதிகளுக்கும் செல்லலாம் என்பதற்குப் பச்சைக் கொடி காட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்வு 1689ம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று அரங்கேறியது. கத்தோலிக்க சமயத்தை பூண்டோடழிக்க வேண்டுமென்று கங்கணங்கட்டிக் கொண்டிருந்த ஹென்றிக் அட்ரியன் வான் என்பவன்தான் அந்நாட்களில் யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்த ஆளுநராக இருந்தான். கத்தோலிக்க சமயப் புத்தெழுச்சிக்குக் காரணமாக இருந்துவரும் குருவானவர் பற்றித் தகவல் தருவோருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்று இவன் பிரகடனம் செய்தான். சில்லாலையிலிருந்தே ஒருவன் வாஸ் அடிகளாரின் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைத் திரட்டி கிறிஸ்மஸ் நள்ளிரவுத் திருப்பலிகள் நடைபெறவிருந்த மூன்று இடங்கள், நேரங்கள் பற்றிய தகவல்களை ஒல்லாந்த அதிகாரிகளுக்கறிவித்தான். எப்படியாவது இந்தக் குருவைப் பிடித்து விட வேண்டுமென்று ஒல்லாந்த போர் வீரர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து திருப்பலி இடம் பெறவிருந்த மூன்று இடங்களையும் சுற்றி வளைத்து நின்றனர். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எல்லோரும் உள்நுழைந்து ஆண், பெண் வயது வேறுபாடுகள் எதுவும் பாராது அத்தனை பேரையும் கைதுசெய்து கடும் தண்டனை வழங்குவதற்காக யாழ்ப்பாணக் கோட்டைக்குக் கொண்டு வந்து சேர்த்தனர். இவர்கள் மத்தியில் வாஸ் அடிகள் காணப்படாதது ஒல்லாந்த அலுவலர்களுக்குப் பெரும் ஏமாற்றமாகவும் கத்தோலிக்க சமூகத்துக்குப் பெரும் ஆறுதலாகவுமிருந்தது.

கைது செய்யப்பட்டவர்களுள் பெண்களும், சிறுவர்களும் கடும் எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டனர். கத்தோலிக்க சமூகத்தின் தலைவர்கள் என்று கருதப்பட்ட 8 ஆண்கள் கடும் தண்டனைக்காகத் தடுத்து வைக்கப்பட்டனர். இவர்களுள் டொன் பேட்றோவும் அவரது நண்பராகிய மனுவல் டி சில்வாவும் அடங்கியிருந்தனர். இவர்களுள் டொன் பேட்றோ என்பவர் கத்தோலிக்கராகவிருந்து பின் கல்வினிசத்தைத் தழுவி அதன்பின் வாஸ் அடிகளின் பணியின் விளைவாக மனம் மாறி கத்தோலிக்க சமயத்திற்கு திருந்திய ஊதாரி மைந்தன் போல வந்து சேர்ந்தவர். தனது முன்னைய தவறுக்கு ஏற்ற பிராயச்சித்தம் செய்ய ஏற்ற ஒரு சந்தர்ப்பத்தை இவர் தேடிக்கொண்டிருந்தார். இவர்களெல்லாரும் சாட்டையடி, கோட்டை கட்டுமானப் பணி, மற்றும் பல்வேறு சித்திரவதை களுக்குள்ளாக்கப்பட்டனர். குறிப்பாக டொன் பேட்றோ மக்கள் மத்தியில் நன்மதிப்பும் ஒல்லாந்தர் மத்தியில் செல்வாக்குள்ளவராகவும் விளங்கி யிருந்தமையாலும் தற்போது கத்தோலிக்க சமயத்தில் பிரமாணிக்கமாக இருப்பதில் உறுதியுடனிருந்தமையாலும் கடுமையான சாட்டையடிக்குட் படுத்தப்பட்டார். உடனடியாக இவர் இறக்கவில்லையென்றாலும் அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாதைகளால் சில நாட்களில் இறந்து, மறைசாட்சியானார். தொடர்ந்து வந்த நாட்களில் ஏனையோரும் பல்வேறு சித்திரவதைக்குள்ளும் சாட்டையடிகளுக்குமுள்ளாகி மறைசாட்சிகளாயினர்.

இந்த 1689 கிறிஸ்மஸ் குரு வேட்டை நிகழ்வுடன் வாஸ் அடிகளாரின் யாழ்ப்பாணக் குடாநாட்டு முதற்கட்ட மறைப்பணி நிறைவுக்கு வந்தது. மறைவாக, பாதுகாப்பாக வாஸ் அடிகள் வன்னிக்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன் அவரது அடுத்த கட்ட மறைப்பணி இலங்கையின் பிற பகுதிகளைப்பணித்தளமாகக் கொண்டு ஆரம்பமானது.

**கண்டியை மையமாகக் கொண்டு பணி விரிவடைதல்**

யாழ்குடாநாட்டில் இருந்து வெளியேறிய வாஸ் அடிகள் வன்னியூடாக புத்தளம் வந்து அங்கும் கத்தோலிக்கர் அடர்த்தியாக வாழ்ந்தபடியாலும் ஏறக்குறைய அரை நூற்றாண்டளவாகக் குருக்களின்றி, குருக்களின் பணியின்றி வாழ்ந்தமையாலும் அங்கே சில வாரங்கள் பணியாற்றினார். எனினும் கண்டிக்குச் செல்வதே அவரது நோக்கமாயிருந்தது. இலங்கையின் கத்தோலிக்கரின் பெரும் எண்ணிக்கை யானோர் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்ட கொழும்பு, நீர்கொழும்பு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலும் கண்டியரசனின் பகுதிகளில் ஒன்றாகிய புத்தளத்திலுமே வாழ்ந்தனர். ஒல்லாந்தர் புத்தளப் பகுதிக்கு வந்து போனாலும் அங்குள்ள கத்தோலிக்கர் கண்டி மன்னனின் குடிமக்களாகக் கருதப்பட்டதால் அவர்களுக்கு மத விடயத்தில் எதுவித நெருக்கு வாரங்களும் அவர்கள் கொடுக்கவில்லை. அத்துடன் கண்டியரசனிடம் ஒல்லாந்தரை எதிர்க்கும் அளவிற்கு கடற்படை எதுவும் இல்லாததால் புத்தளப் பகுதியில் அவர்களது நடமாட்டத்திற்கு கண்டியரசன் தடைவிதிக்கவில்லை.

கண்டியில் கத்தோலிக்கருக்கு பூரண மதச் சுதந்திரம் இருந்தமையால் அங்கு சென்று தமது நிரந்தர வதிவிடத்தை அமைத்துக் கொண்டு பின்னர் அங்கிருந்து ஒல்லாந்தருடைய கட்டுப்பாட்டுப் பகுதிகளுள் இரகசியமாகச் சென்று மறைப்பணியாற்றுவதும் தனது பிரசன்னம் ஒல்லாந்த அதிகாரிகளின் கவனத்திற்கு வரும் சந்தர்ப்பங்களில் உடனடியாக கண்டியரசனின் பகுதியில் உள்ள தமது இடத்துக்கு வருவதும் என்ற திட்டம் சிறந்ததென அடிகளாருக்குப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்டி நகருள் கைதியாக வாஸ் அடிகள் - பின் விளைவுகளில் இறைபராமரிப்பு**

வாஸ் அடிகள் கண்டி நகருள் செல்வதற்கு அந்தோனியோ சோத்தொமேயோர் என்னும் போத்துக்கேயரின் துணையோடு வந்த போது இதைக் கேள்வியுற்ற அரச மாளிகையில் பணியாற்றி வந்த நன்கிளார் டெலா நெறோல் எனும் கல்வினிசத்தைப் பின்பற்றி வந்த பிரெஞ்சுக்காரனின் சூழ்ச்சியினால் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு ஒரு ஒற்றனாக கொண்டு வரப்பட்டார். ஒரு போத்துக்கேய ஒற்றன் கத்தோலிக்க குரு வேடமணிந்து கண்டியரசுக்குள் நுழைத்திருப்பதாக அரசனுக்கு டெலா நெறோல் பொய்த் தகவல் வழங்கியதால்தான் வாஸ் அடிகளாருக்கு இந்நிலையேற்பட்டது. கண்டி நகரில் வந்து, அங்கும், பின் அங்கிருந்து மற்ற இடங்களுக்கும் சென்று திருப்பலி மற்றும் திருவருட்சாதனங்களை நிறைவேற்றி, இவையில்லாது அரை நூற்றாண்டளவில் இருந்த கத்தோலிக்கருக்கு ஆன்மீகப் பணி புரியலாம் என்று நிறைய எதிர்பார்ப்புடன் வந்த வாஸ் அடிகளாரக்கு ஒரு ஒற்றனாகச் சிறையிலடைக்கப்பட்ட அனுபவமும் பெரிய வேதனையாகவும் பின்னடைவாகவுமிருந்தது. ஆனால் இந்தப் பின்னடைவே இவரது எஞ்சிய பணி வாழ்வுக்கான உறுதியான அடித்தளமாக மாற இறைபராமரிப்பு செயல்பட்டது. வாஸ் அடிகளாருக்கெதிரான குற்றம் பாரதூரமானதாகக் கருதப்பட்டதால் அரசன் அவரைப் பற்றிய தகவல்களை அறிய விசேட கவனம் செலுத்தியது மட்டுமன்றி தானும் அவரைப் பற்றியறிய நேரடியாகக் கண்காணிப்பில் ஈடுபட்டான். வெகுவிரைவில் அவர் மத விடயங்களில் மட்டும் ஈடுபடும் ஒரு துறவி மட்டுமேயென்றும் அவரால் எவருக்கும் எதுவித தீங்கும் ஏற்படாது என்ற உண்மையும் உறுதியானது. இதன் பின் அவரது சிறைக் கெடுபிடிகள் தளர்த்தப்பட்டன. இதுவரை தமிழ் மொழியை மட்டுமே அறிந்திருந்த வாஸ் அடிகள் இனிமேல் சிங்கள மொழியறியவும் தேவையென்பதையுணர்ந்து தமக்குக் கிடைத்த நேரத்தில் சிங்களத்தையும் கற்கத் தொடங்கினார். ஒரு அகராதியையும் தயாரித்தார். பிற்காலத்தில் வந்த ஒரட்டோரியன் சபைக் குருக்கள் சிங்கள மொழியைக் கற்க இவ்வகராதி உதவியாயிருந்தது. அத்துடன் தம்மோடிருந்த பணியாளன் யோண் எதுவித பணியுமின்றி இருந்ததால் அவனுக்கு லத்தீன் மொழியை ஒரளவு கற்பித்து தான் செபித்து வந்த கட்டளைச்செபத்தை விளங்கி வாசித்து செபிக்கவும் கற்றுக் கொடுத்தார்.

அரசன் விமலதர்மசூரியனுக்கு வாஸ் அடிகள் மீது ஏற்பட்டிருந்த நன்மதிப்பு மேலும் அதிகமானதாலும் சிறைவாசத்தின் கடுமை தளர்த்தப்பட்டதாலும் மத வழிபாடுகளுக்கு ஏதாவது ஆட்சேபனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குமா என்பதைச் சோதித்தறிய ஒரு வழியைக் கையாண்டார். யோணின் துணையோடு ஒரு சிறிய கொட்டில் கோவிலை அமைத்து ஒரு சிலுவையையும் நாட்டினார். அங்கு இருவரும் காலை, மாலை, இரவுகளில் செபிக்கத்துவங்கினர். இக்காட்சியை அப்பாதையால் கடந்து செல்வோர் கண்டனர். பின்னர் எதுவித எதிர்ப்புக்களும், விமர்சனங்களும் தோன்றாதபடியால் அங்கு 1691ம் ஆண்டு முதன்முதலாக கண்டியில் கிறிஸ்மஸ் இரவுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். அதனைத் தொடர்ந்து படிப்படியாக கத்தோலிக்கர்கள் அச்சமின்றி இங்குவரத்துவங்கினர். வாஸ் அடிகளாரும் சுதந்திரமாக வெளியே சென்று தமது குருத்துவப்பணியை குறிப்பாக நோயுற்றவர்களுக்கு திருவருட்சாதனங்களை வழங்கிவரலானார்.

ஒருவேளை வாஸ் அடிகளார் எவருடைய கண்களுக்கும்படாமல் அல்லது மாறுவேடமணிந்து வந்திருந்தால் இவ்வளவு விரைவிலும் வினைத்திறனுடனும் அரச ஆதரவோடும் பணியாற்றிருப்பார் என்பது சந்தேகமே. இவ்வாறாக கைதியாகக் கூட்டிவரப்பட்டமையால் அரசனுடைய தீவிர கண்காணிப்புக்குள்ளாக வேண்டியிருந்தமையால் அவரது குற்றமற்ற தன்மை நிரூபிக்கப்பட்டமை மட்டுமன்றி அவருடைய புனித வாழ்வும் அரசனது கண்முன்னே நிரூபணமாயிற்று. எனவே கைதியாக வந்தமையால் வந்த ஏமாற்றமும் பின்னடைவும் உண்மையில் அவரது மறைப்பணியில் அவர் தம்மை நன்கு தயாரிக்கவும் சுதந்திரமாகக் கண்டியில் பணியாற்றவும் ஒல்லாந்தருடைய கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு விரும்பிய நேரம் சென்று வர அரசனுடைய ஆதரவும் கிடைக்க வழிவகுத்தது.

வாஸ் அடிகளின் நன்மதிப்பு கண்டியரசனைப் பொறுத்தளவில் உயர்ந்து சென்றதைப் பொறுக்க முடியாத கல்வினிசவாதியும் முன்னர் வாஸ் அடிகளார் ஒரு போர்த்துக்கேய ஒற்றன் என்று பொய்க்குற்றம் சாட்டிய நான்கிளார் டெலா நெறோல் மீண்டும் தனது சூழ்ச்சிகளைப் புதுப்பித்தான். பௌத்த துறவிகளை வாஸ் அடிகளாருக்கெதிராகத் தூண்டிவிட்டான். வாஸ் அடிகள் ஏற்பாட்டில் நடந்த வழிபாடுகளுக்குச் சென்ற கத்தோலிக்கரும் துன்புறுத்தப்பட்டார்கள். வாஸ் அடிகள் உண்மையில் ஒரு ஒற்றன்தான் என்ற புரளியை மீண்டும் கிளறிவிட்டான். ஆனால் அரசன் இவனுடைய சூழ்ச்சிகளைக் கவனத்திலெடுக்கவில்லை.

வாஸ் அடிகளாரது மதிப்பும் செல்வாக்கும் மேலும் உயர்வடைய அங்கு நடந்த ஒரு புதுமை நிகழ்வும் வழிவகுத்தது. அதுதான் நீண்ட கால வரட்சியின் பின் வாஸ் அடிகளாரின் செபத்தினால் கண்டியில் பெய்த பெருமழை. கண்டியில் 1696ம் ஆண்டில் கடும் வரட்சியால் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்ச அபாயம் ஏற்பட்டது. மழை வேண்டிச் செய்த மூடநம்பிக்கைகளுடன் கூடிய சடங்குகளால் எதுவித பலனும் கிடைக்காத போது அரசன் விமலதர்மசூரியன் வாஸ் அடிகளாரிடம் இறைவேண்டல் செய்யும்படி வேண்டியதைத்தொடர்ந்து, அடிகளும் அரண்மனைக்கு முன் உள்ள திறந்த வெளியில் ஒரு பீடம் ஏற்படுத்தி ஒரு சிலுவையை நட்டு, வேண்டுதலில் ஈடுபடவே வேண்டுதல் முடிய முன்னரே கடும் மழை பெய்யத் தொடங்கியது. இதனால் வாஸ் அடிகளார் மீதும் கத்தோலிக்க சமயத்தின் மீதும் அரசன் உட்பட அங்கிருந்த அனைவரதும், இதைக் கேள்வியுற்ற அனைவரதும் மதிப்பு மேலும் உயரத் தொடங்கியது. வாஸ் அடிகள் எதுவித தங்குதடையுமின்றி தமது மறைப்பணியை முன்னெடுத்துச் செல்லக் கூடியதாயுமிருந்தது.

தமிழில் ஒரு பழமொழியுண்டு – அறையில் ஆடிய பின் அம்பலத்தில் ஆடவேண்டும் என்று. வாஸ் அடிகளின் பணிவாழ்வை பொறுத்தளவில் அவரது சில பணி அனுபவங்கள் அவை எதேச்சையாக கிடைத்த அனுபவங்களாக இருந்தாலும், பிற்காலத்தில் தமது பணியை விரிவுபடுத்தி வினைத்திறனுடன் முன்னெடுத்துச் செல்ல உதவியுள்ளன எனலாம். இவ்வாறாக யாழ் குடா நாட்டில் முதலில் பணியாற்றிய ஏறக்குறைய இரண்டரை வருட காலத்தில் சில்லாலை எனும் ஓரளவு பாதுகாப்பான கிராமத்திலிருந்து கொண்டு வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, கிளாலி, யாழ்ப்பாணப்பட்டினம் ஆகிய இடங்களுக்கும், நெடுந்தீவு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய தீவுப்பகுதிகளுக்கும் சென்று பணிபுரிவதும் அவரது எதிரிகளாகிய ஒல்லாந்தருக்குத் தெரியவரும் கட்டத்தில் பாதுகாப்பிற்காக உடனே சில்லாலைக்குப் பின்வாங்கி வருவதும் வழக்கமாக இருந்தது. யாழ் குடாநாட்டில் வாஸ் அடிகள் சிறிய அளவில் வகுத்த இம்மறைப்பணி வியூக அனுபவம் பின்னாளில் முழு இலங்கைப் பணிக்கும் அவருக்கு துணையாயிருந்தது. ஒல்லாந்தரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு மாறுவேடத்தில் செல்வதற்கும் அடிகளாருக்கு யாழ்குடா நாட்டில் நல்ல அநுபவம் கிடைத்திருந்தது. 40 வருடங்களாகக் குருக்களையே காணாத பகுதிகளாகிய மாதோட்டம், மன்னார், களுத்துறை, நீர்கொழும்பு, கொழும்பு ஆகிய இடங்களில் பெருந்தொகையான கத்தோலிக்கர் இருந்தமையாலும் கலாபனைகளால் இப்பகுதிகளில் கணிசமான தொகையினர் விசுவாசத்தை மறுதலித்தமையாலும் இவ்விடங்களுக்கு வாஸ் அடிகள் சென்று வரவேண்டியிருந்தது. யாழ்ப்பாணம், பூநகரி ஆகிய இடங்களுக்கும் பின்னர் கிழக்கில் கொட்டியார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை, புளியந்தீவு, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கும் சென்று பணியாற்றிப் பின் கண்டி வந்து சேர்ந்தார். இவ்வாறாக வாஸ் அடிகளாரின் மறைப்பணிப் பயணங்கள் ஒல்லாந்த பகுதிகளின் கரையோரங்களில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கும் சென்று மக்களுக்குத் திருவருட் சாதனங்களை நிறைவேற்றுவதும், விசுவாசத்தில் உறுதிப்படுத்துவதும், மூடநம்பிக்கைகளை களைவதும் பின்னர் கண்டி திரும்புவதுமாக அமைந்திருந்தது.

ஏறக்குறைய 9 வருடங்கள் இலங்கையின் பணியின் நிறைவில் நல்லதொரு அடித்தளம் இட்டிருந்தார். அத்துடன் கண்டியரசனது முழுமையான ஒத்துழைப்பு உறுதியானதும், மேலும் தமக்கு துணையாகக் குருக்களை வரவழைக்க முடியும் என்பதையும் அவர்கள் வருகையால் தம் பணியை விரிவுபடுத்தி வினைத்திறன் உள்ளதாக்கலாம் என்றும் தாம் முன்னெடுத்த மறைப்பணி ஒரு தொடர் பணியாக இருக்கும் என்பதையும் உணர்ந்து, தமது சபைக் குருக்களை அனுப்பும்படி விண்ணப்பித்தார். ஆனால் கோவாவிலுள்ள கத்தோலிக்க திருச்சபையின் ஆட்சிப்பீடம் இவரது ஒரட்டோரியன் சபைக்குரிய முறையான அங்கீகாரமின்மை போன்ற பல்வேறு சிக்கல்களை முன்வைத்து மேலும் மறைப்பணியாளரை அனுப்புவதில் அக்கறை காட்டவில்லை. ஆனால் வாஸ் அடிகளாரின் அரும் பணி பற்றிய நம்பத்தகுந்த தகவல்கள், இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையில் வாஸ் அடிகளாரின் பணியினால் ஏற்பட்ட மறுமலர்ச்சி, இவற்றை அறிந்த இயேசுசபைக் குருக்களின் பரிந்துரைகளுக்குமுன் கோவா கத்தோலிக்க திருச்சபை ஆட்சிப்பீடம் வளைந்து கொடுத்தது. மேலும் குருக்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு உடன்பட்டது. இதன் விளைவாக 1697ம் ஆண்டு மேலும் குருக்களின் வருகை தொடங்கியது.

அதே வருடம் கண்டியில் அந்நாட்களில் இலங்கையில் பெரும் உயிர் கொல்லி நோயாக விளங்கிய அம்மை எனும் கொள்ளை நோய் தோன்றிப் பலரைப் பலியெடுத்தது. இந்நாட்களில் வாஸ் அடிகளாரதும் அவரது துணையாளரதும் பணிகள் மகத்தானவையாக இருந்தன. முன்னர் யாழ்ப்பாணத்தில் வாஸ் அடிகளாரே வாந்தி பேதி நோயினால் பாதிக்கப்பட்டு இறக்கும் தறுவாயிலிருந்த அனுபவம் இப்போது நோயாளரைப் பராமரிக்க வேண்டி மனநிலையையும், துணிவையும் அவருக்கு வழங்கியது. இந்நாட்களிலும் வாஸ் அடிகளாருக்கும் அவரது துணைக் குருக்களுக்கு எதிராகவும் சில கத்தோலிக்க மத விரோதிகள் புரளிகளை கிளப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டனர். அதாவது வைத்தியர்கள் மக்களுக்கு வரும் நோய்களால் லாபம் பெறுவது போல குருக்களும் கொள்ளை நோய்களால் இறப்பவர்களின் அடக்கச் சடங்குகளை நிறைவேற்றுவதால் இலாபம் பெறுகின்றார்கள் போன்ற புரளிகள் இதற்கு உதாரணம். ஆனால் கண்டியரசனோ பெரும்பான்மையான மக்களோ இது போன்ற விஷமப்பிரச்சாரங்களுக்கு செவிமடுக்காது வாஸ் அடிகளாரதும் அவரது குருக்களதும் பணிகளை பெரிதும் மதித்தனர்.

## முடிவுரை

யோசப் வாஸ் அடிகள் தமது குருத்துவப் பணியை தமது மறைமாவட்டம் அல்லது தமது நாடு என்ற வரையறைக்குட்படுத்தியவரல்ல. கிறிஸ்துவின் பணி யூதரென்றும் புறவினத்தாரென்றும் வேறுபாடின்றி எல்லா மக்களும் என்று இருந்தது போல, தேவை எங்கு அதிகம் உள்ளதோ அங்கு தமது சேவையை வழங்க முன்வந்தார். எந்த வித தடைகளாலும் அவரது பணிக்கு முட்டுக்கட்டை போட முடியவில்லை.

ஆபத்துக்கள் நிறைந்த இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்கு குருக்களின் பணி தேவையென்பதை உணர்ந்து இறைபராமரிப்பில் முழு நம்பிக்கை வைத்து அவர் முன்வைத்த காலைப் பின்வைக்காது தமது பணியை முன்னெடுத்தார். ஆரம்பத்திலிருந்தே இத்திட்டத்திற்குப் பல தடைகளும், பின்னடைவுகளுமேற்பட்டன. இத்தடைகள் பலவகைப்பட்டன. திருச்சபைத் தலைமைப் பீடங்களிலிலிருந்து வந்த தடைகள், அவருக்கு துணையாக வந்தவர்களிடமிருந்து போதிய ஒத்துழைப்பில்லாமை, இயற்கை சீற்றத்தால் ஏற்பட்ட தடைகள், நோய்நொடிகளால் ஏற்பட்ட தடைகள், ஒல்லாந்த அலுவலர், ஆளுநர்களால் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள், கலாபனைகள், கத்தோலிக்க மத விரோதிகளால் ஏற்பட்ட சூழ்ச்சிகள், போன்றவற்றால் ஏற்பட்ட தடைகள் பின்னடைவுகளாக தென்பட்டாலும் இறைபராமரிப்பால் வாஸ் அடிகளாரது பணிவாழ்வைப் பொறுத்தளவில் அவரது அடுத்த கட்ட பணிவாழ்வுக்குத் தேவையான தயாரிப்பாகவும், உந்துசக்தியாகவும் இருந்தமையையே காணக்கூடியதாயிருக்கின்றது. கிறிஸ்துவின் பணியைப்போலவே ஒரு நற்செய்தியாளனின் பணியும் ஒரு துன்புறும் ஊழியனின் பணியாக இருக்குமென்பதற்கு வாஸ் அடிகள் பணி வாழ்வில் மேற்கொண்ட பாத்திரங்களும் அவர் நடத்தப்பட்ட விதங்களும் சான்றுகள். அவர் கூலி வேலை தேடுகிறவராக, பிச்சைக்காரனாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்தில் செபமாலையுடன் பிச்சையெடுக்கும் போது ஒரு ஏளனத்திற்குரிய பிச்சைக்காரனாக, தேடப்படுகின்ற அரச சட்டத்தை மீறிய குற்றவாளியாக, ஒற்றனாக, சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட கைதியாக, சிறையிலும் வீட்டுக்காவலிலும் உள்ள ஒரு கைதியாக எல்லாம் நடத்தப்பட வேண்டியிருந்தது. அடிகளாரின் இந்நிலைகள் அவரது பணிக்கும் அவருக்குப்பின் வந்தவர்களது பணிக்கும் உரம் சேர்த்தன. அவர் வெளிப்படுத்திய தாழ்ச்சி அவரது பணிக்கும் அவருக்குப்பின் வந்த மறைப்பணியாளர்களின் பணிக்கும் உரம் சேர்த்தது. பின்னடைவுகளைக் கண்டு பின்வாங்காத ஒரு புனிதருடைய வாழ்வின் சிறப்பம்சம் இதுதான். யோசப் வாஸ் அடிகளின் வாழ்வும் பணியும் இதற்கு சிறந்த உதாரணம்.

**துணைநின்ற நூல்கள்:**


1. திருவிவிலியம்
2. *Butler's Lives of the Saints*. ed. Herbert. J. Thurston, SJ and Donald Attwater, Vol. II Burns & Oates London 1981.
3. Mascarenhas, Michael, S.D.B., *Through Storm and Tempest: A Biography Bl. Blessed Joseph Vaz*, Mumbai, 2001.
4. Perera, S.G.,S.J., *The Life of the Venerable Father Joseph Vaz, Apostle of Ceylon*, Galle, 1953.
5. Rego, Sebastian de, *Life of Father Joseph Vaz – NahNrth]; Kdptupd; rupj;jpuk*; Original, Published in 1747, tr. in Tamil by Fr. Gabriel Patchek, ed. by Fr. S. Gnanaprakasar, O.M.I. Jaffna 1910.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக சமூகப் பணிகளால் ஈழத்தில் மறைவளர்த்த அருளாளர் யோசப் வாஸ்

எஸ்.யேசுதாஸ்
ஊடக எழுத்தாளர்,
கொழும்புத்துறை.

உலகில் பின்பற்றப்படும் பல்வேறு மதங்களும் குறிப்பிட்ட வெவ்வேறு பகுதிகளில் தோற்றம் பெற்றவையாகும். இருப்பினும் அந்தந்த மத கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட தலைவர்கள், பிரசாரங்கள், மற்றும் நாடுகாண் பயணங்கள் வணிக நோக்கங்கள் ஆக்கிரமிப்பு போன்ற நடவடிக்கைகள் மூலமே நாடுகள் தோறும் பெரிதும் பரம்பலடைந்தன.

இந்த வகையில் 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எதிர்பாராத விதமாக இலங்கையில் காலடிவைத்த போர்த்துக்கேயர் படிப்படியாக பெரும் பகுதியைக் கைப்பற்றி ஏறத்தாழ 100 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததோடு தாம் அனுசரித்த கத்தோலிக்க சமயத்தையும் பரப்பலாயினர். அநேக மக்கள் இயேசுவை அறிந்து விசுவசித்து திருமறைவழி ஒழுகலாயினர் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் கிறிஸ்தவம் ஆழ வேரூன்றி வளர்ச்சியடைந்திருந்தது.



இந்த வேளையில் இலங்கையின் சுதேச அரசுகள் போர்த்துக்கேயர் ஆதிக்கத்தை அகற்ற ஒல்லாந்தரின் உதவியை நாடின. இலங்கையின் வளங்களைச் சுரண்டவும் தத்தமது பாதுகாப்பு கேந்திர நிலையங்களை உருவாக்கவும் ஐரோப்பிய நாடுகள் போட்டி போட்டுக் கொண்டிருந்த உலக சூழமைவில் ஒல்லாந்தரும் தமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கைக்குள் பிரவேசித்து போர்த்துக்கேயரை விரட்டி விட்டனர்.

கத்தோலிக்க மத அரசின் வீழ்ச்சியையடுத்து ஒல்லாந்த ஆக்கிரமிப்பாளர்கள் தமது கல்வின் மதத்தை அரசு அந்தஸ்தில் வைத்து கத்தோலிக்க சமயத்தை அடியோடு அழிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கினர் ஐரோப்பிய குருக்கள் நாடுகடத்தப்பட்டமையினால் ஆயனில்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுகள் போல கத்தோலிக்கர் சிதறடிக்கப்பட்டனர். அரச அலுவல்கள், பதவிகள், கல்வி, பிறப்பு, திருமண இறப்பு பதிவுகள் அனைத்தும் கல்வின் மதத்தில் இணைந்தவர்களுக்கே வழங்கப்பட்டன. கத்தோலிக்க குருவையோ வழிபடுவோரையோ கண்டால் சிரச்சேதம். வழிபாட்டிடங்களை அரசுடமை யாக்கி சத்தியமறையை முற்றாக வேரறுக்கும் திட்டங்கள் அரங்கேறின.

ஆயினும் செப தவ வேண்டுதல்களில் ஈடுபட்டு இன்னல்களுக்கு அடிபணியாது புடமிடப்பட்ட இறைமக்களாக தமது ஆன்மிகத்தை மீட்க இறைவன் நல்ல வழிகாட்டுவார் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வந்தனர்.

ஈழத்திருநாட்டில் துளிர்விட்ட கத்தோலிக்கம் ஒல்லாந்தரின் கலாபனையால் அழிந்து விடாது யோசப் வாஸ் என்னும் இறை ஊழியன் வழியாக புத்துயிர் பெறவேண்டும் என்பது இறைவனின் திட்டமாக இருந்தது. உலகெங்கும் சென்று எல்லா மக்களையும் என் சீடராக்குங்கள் என்ற இயேசுவின் பணிப்புரையை மனதிலிருத்தி குருத்துவப்பணியாற்றிய அருளாளர் யோசப் வாஸை கருவியாகத் தெரிந்து கொண்டார் இவர் விதைத்த ஆன்மீக விதை பலமடங்கு பலன் தந்து இன்று பெருவிருட்சமாக திகழ்கிறதென்றால் அது அவரது அப்போஸ்தலிக்க சேவை, தியாகம், பொதுப்பணிகளின் வெளிப்பாடாகும்.

கோவை மாவட்டத்தில் சங்குவானி கிராமத்தைச் சொந்த ஊராகக் கொண்டு 1651 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 21ந் திகதி கொங்கணிப் பிராமணர் குலத்து தித்த யோசப் வாஸ் குருத்துவக் கல்வியில் மதிநுட்பத்துடன் தேறி 1676 இல் தனது 25 ஆவது வயதில் கோவை ஆயர் அந்தோனியு பிரந்தாவு ஆண்டகையால் இயேசு சபைக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு சாயிட்டி கன்னடம் போன்ற இடங்களில் சில ஆண்டுகள் பணியாற்றி மீண்டும் கோவை வந்தார். சில சந்நியாசிகள் சேர்ந்து உருவாக்க முயன்று கைவிடப்பட்ட நிலையில் இருந்த சுதேச துறவற அமைப்புக்கு உயிரூட்டி 1686 இல் கோவைத் தியான சம்பிரதாயக் குருக்கள் சபையை ஸ்தாபித்தார்.


கிறிஸ்தவ ஆன்மீகத்தை மீட்டெடுக்க துறவற சபையே சிறந்தது என்ற நோக்கில் உருவான இச்சபை இலங்கைத் திருச்சபையை அழிவில் இருந்து காப்பாற்றி 150 ஆண்டுகள் பண்படுத்தி வளர்த்ததை மறக்க முடியாது. இலங்கையில் இன்னலுற்றிருக்கும் கத்தோலிக்கருக்கு ஆன்மீக வழிகாட்டியாக சமூகசேவையாளனாக பணிபுரிய வேண்டுமென்ற நெடுநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக்கிடக்கையின் உந்துதலால் யுவான் என்னும் பணியாளனையும் இணைத்துக் கொண்டு கோவாவிலிருந்து கால் நடையாக தூத்துக்குடி வந்து இரப்போனின் வேடம் பூண்டு படகேறி 1627 ஆம் ஆண்டு தமது 35ஆவது வயதில் நீண்ட பணிக்களமான இலங்கைத்தீவின் மன்னாரில் வந்திறங்கினார்.

கைத்தடியோ, பணப்பையோ, உணவுப்பொட்டலமோ, மாற்றுடைகளோ எதுவுமின்றி இறையாட்சியை பறை சாற்றவும், பிணிதீர்க்கவும், ஒரே மேய்ப்பனின் கீழ் மந்தையை அணி திரட்டவும், திருச்சிலுவையையும் செபமாலையையும் கவசமாக முன்னிறுத்தி ஆன்மீகப்பணி தொடர புறப்பட்டது வாஸ் என்னும் ஞான விடிவெள்ளி (லூக் 9: 3-6)



படகு புயற்காற்றில் சிக்கி கடலில் அலைந்தமையால் ஏற்பட்ட பசி, புதிய இடம், ஒல்லாந்தர் நடமாட்டம், என்பன அவர்களுக்கு மனச்சோர்வை உண்டுபண்ணின. செபவலிமையுடன் இருந்து உண்டு தெம்பு பெற்று சில நாள்களில் தூத்துக்குடியில் கிடைத்த யாசகருக்கான உத்தரவுப் பத்திரத்துடன் பூநகரியூடாக யாழ் நகரின் எல்லையில் அமைந்துள்ள கொழும்புத்துறையில் வந்திறங்கியதாக அறியமுடிகிறது. இப்புனிதரின் பாதம் தொட்ட கொழும்புத்துறை இன்று குருக்களின் விளை நிலங்களான பல குருமடங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பது முனிவரின் ஆசீர் என்றால் அது மிகையாகாது.

போதிய உணவு தூக்க மின்மையால் வயிற்றோட்ட நோய் ஏற்பட்டு காட்டுப் பகுதியில் தள்ளி விடப்பட்டார்கள். பதிதமார்க்கத் தால் நசுக்கப்பட்டு ஆன்ம பசியுடன் சிதைவுற்றுக் கொண்டிருக்கும் மக்களைத் திடப்படுத்த வந்த மறைவீரனை கைவிடப்பட்டோரின் கடவுள் கைவிடுவாரா? அவ் வழியால் விறகு வெட்டச் சென்ற பெண்களில் ஒருத்தி மனமிரங்கி தினமும் அரிசிக் கஞ்சி கொடுத்து உதவினார். குணம் பெற்று கத்தோலிக்கரைத் தேடி ஞான வேட்டையாடும் படலத்தை ஆரம்பித்தார். தாய் மொழி கொங் கணியாக இருந்தாலும் மலையாள தேசத்தில் பயின்ற தமிழ் மொழி மக்களுடன் உரையாட இலகு வாயிருந்தது. அவருடைய எளிமையும் ஆன்மீக, பொது நோக்கு விசாரிப்புக்களும் குருவாக இருக்கலாம் என்ற எண்ணத்தை கத்தோலிக்கருக்கு உண்டாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறுபூத்த நெருப்பாக கத்தோலிக்கரின் உள்ளத்தில் இருக்கும் ஆன்மீக வாஞ்சையை பற்றி எரியச் செய்ய மாறுவேடத்தில் வந்த குருவானவரே நான் என்று கத்தோலிக்கரான யானை வியாபார செல்வந்தனிடம் தன்னை வெளிப்படுத்தினார் மகிழ்வுடன் தனது வீட்டில் அடைக்கலம் கொடுத்து அப்பகுதியில் வாழ்ந்த கத்தோலிக்கரின் ஞானக்கடமைகளை நிறைவேற்ற வழிவகுத்தார். எனினும் பாதுகாப்பாக இருந்து தேவ ஊழியம் புரிய தகுந்த இடம் கிறிஸ்தவர்கள் செறிந்து வாழும் சின்னறோமை என அழைக்கப்படும் சில்லாலையே பொருத்தமானது என்று முடிவு செய்து இரவோடிரவாக அங்கு அழைத்துச் சென்றனர்.

சுமார் அரை நூற்றாண்டாக திருப்பலியோ, திருவருட்சாதனங்களோ, மறையுரையோ இன்றி உள்ளூர் மூப்பர்களால் வழிநடத்தப்பட்டு வந்த சில்லாலைத் திருச்சபை, தம்மத்தியில் குரு ஒருவர் வருகிறார் என்று அறிந்து இயேசுவையே எதிர் கொள்வது போல புளகாங்கிதமடைந்தனர். ஆயினும் இன்றைய திருச்சபைக்கு இருக்கும் வசதிவாய்ப்புக்களோ அரச சுதந்திரமோ அன்று இருக்கவில்லை. இத்தனை குருக்கள் துறவிகள் பொதுநிலையினர் இணைந்து ஆற்றும் திருமறைப்பணியை தனியொரு குருவாக யோசப் வாஸ் முனிவர் நிறைவேற்றினாரென்றால் அவர் இறைவனால் அருட்பொழிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்ட அப்போஸ்தலர் என்பதே உண்மையாகும்.

ஒல்லாந்த படைகளின் கண்காணிப்பு ஒருபுறம், பணத்துக்காக பதவிக்காக காட்டிக் கொடுப்போர் மறுபுறம், மாட்டிக் கொண்டால் கிடைக்கும் தண்டணை இன்னொருபுறம், இத்தனைக்கும் முகங்கொடுத்து குடா நாட்டின் கிராமங்கள் தீவுப்பகுதி எங்கும் சென்று விசுவாசிகளைத் திடப்படுத்திவந்தார். இவரது தூயவாழ்வு, சந்நியாச ஒறுத்தல்கள், எளிமை, பகிர்வு இறை பிரமாணிக்கம், வல்லமை, பிறசமயத்தினர், கத்தோலிக்கத்தைக் கைவிட்டோர் அனைவரையும் இவரிடம் ஈர்த்தது.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட கத்தோலிக்க மறுமலர்ச்சியை அறிந்த அதிகாரி என்றிக் வான்றீட் கொதித்தெழுந்தான். சத்திய மறைவீரனைப் பல முறை கைதுசெய்ய முயன்றும் முடியவில்லை. இறுதியாக, 1689 ஆம் ஆண்டு 3 இடங்களில் கிறிஸ்மஸ் திருப்பலி நிறைவேற இருப்பதை அறிந்து அவ்விடங்களை முற்றுகையிட்டு அனைவரையும் கைது செய்தான். ஆனால் யோசப் வாஸை இறைவன் காப்பாற்றி வழிநடத்தினார். இக்கலாபனையில் டொன் பேதுரு புதிய சகாப்தத்தின் முதல் வேத சாட்சியாக உயிர் நீத்தார். மற்றும் மனுவல் டி. சில்லாவுடன் 6 பேரும் யாழ் கோட்டையில் அடைபட்டு வேத சாட்சியாகளாக மரித்தார்கள்.

இலங்கையில் இன்னும் பல இடங்கள் ஆன்மீக எழுச்சிக்காக காத்திருப்பதையும் பாதுகாப்பான இடத்திலிருந்துதான் தனது குறிக்கோளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்ற முடியும் என்பதையும் ஞானத்தால் உணர்ந்து ஒல்லாந்தர் ஆட்சிக்கு உட்படாத கண்டி இராட்சியம் செல்லப் புறப்பட்டார். செல்லும் வழிகளில் உள்ள கிராமங்கள் தோறும் கிறிஸ்தவர்களைச் சந்தித்து விசுவாசத்தை ஆழப்படுத்தினார். 1690 இல் புத்தளம் சொன்றடைந்தார். அங்கு சிலவருடங்கள் பணியாற்றி பின்னர் கண்டி இராட்சியத்தை ஆண்டுவரும் 2ஆம் விமலதர்ம சூரியன் கத்தோலிக்கருக்கு அடைக்கலம் கொடுத்திருப்பதை அறிந்து, காடு மலைகளைக் கடந்து கண்டிக்குச் சென்றார். விரோதிகளின் சூழ்ச்சியால் வேவுகாரனென மன்னனால் சிறையில் அடைக்கப்பட்டார்.

அங்கும் அவர் ஓய்ந்திருக்கவில்லை. கைதிகளை நல்வழிப் படுத்துவதிலும் உதவிபுரிவதிலும் ஈடுபட்டதோடு சிங்கள் மொழியையும் கற்றார். இவர் உளவாளி அல்ல உண்மையான குருவானவர்தான் என்பதை அவதானித்த அரசன் விடுதலை செய்து மறைப்பணியாற்ற அனுமதியளித்தான். கண்டியை தலைமையகமாகக்கொண்டு நீர்கொழும்பு, கொழும்பு, மட்டக்களப்பு, திருமலை, வன்னி, யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் பெரும்பகுதிகளுக்கு பல முறை சென்று வந்து பல்லாயிரக் கணக்கான மக்களை மனந்திருப்பினார்.

யோசப் வாஸ் அடிகள் ஆன்மீகப்பணியுடன் மட்டும் நின்று விடவில்லை. இறைவனிடம் பெற்றுக்கொண்ட கொடையின் அருள் அடையாளங்களை பொது நன்மைக்காகப் பயன்படுத்தினார். கண்டியில் பல்லாண்டுகள் மழையின்றி வரட்சியால் பயிர்கள், விலங்குகள், மக்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டபோது பீடம் அமைத்து கடின இறைவேண்டல் புரிந்து பெருமழை வருவித்தார். அவர் இருந்த இடம் மட்டும் நனையாது காணப்பட்டது.

1697 இல் கண்டியில் விரைவாக மனிதரைக் கொல்லும் வைசூரிநோய் வேகமாகப்பரவியது. நாளாந்தம் மக்கள் மடிந்த வண்ணமிருந்தனர். நோய்வாய்ப்பட்டோரைப் பராமரிக்க எவரும் முன் வரவில்லை. மன்னன் முதலாக வைசூரி நோய்த் தொற்றுக்குப் பயந்து காட்டுப் பகுதிக்குச் சென்று விட்டனர். ஆனால் யோசவ் வாஸ் அடிகள் நல்ல சமாரியனைப் போன்று பராமரித்து மருத்துவம் செய்ததுடன் இறைவேண்டலால் நோயின் தாக்கமும் குறையச் செய்தார் இதன் மூலம் ஆன்மீகமும் பொதுப்பணியும் இரண்டறக் கலந்தவை என்பதை நிரூபித்தார். அதன் பின்னர் மன்னனின் ஆதரவும் மக்களின் பெருமதிப்பும் தங்கு தடையின்றி ஆன்மீகப்பணியாற்றும் களநிலையைத் தோற்றுவித்தது.

கோவை மேற்றாணியாரின் பிரதிநிதியாக 1696 இல் நியமிக்கப்பட்ட முனிவரின் வேண்டுகோளுக்கிணங்க பல குருக்கள் அனுப்பப்பட்டனர். 1705இல் இலங்கைத் தீவை 8 பிரிவுகளாகப் பிரித்து குருக்கள் நிர்வகிக்க, யோசப் வாஸ் அடிகள் ஆயர் போன்று கண்காணித்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவையில் உதித்த ஞான ஆதவன் இலங்கைக் கத்தோலிக் கத்தின் சூழ் இருளகற்றிய மாதவத்தோன், தன்னையே அர்ப்பணித்து 24 ஆண்டுகள் ஆன்மீக, பொது நலப்பணிகள் புரிந்ததன் பெரும்பயனே இன்றைய கத்தோலிக்க திருச்சபைக்கு ஸ்திரத்தன்மையை அளித்தது. இடர்கள், தடைகள், அச்சுறுத்தல்கள் உயிராபத்துக்களைத் தாண்டி அருளாளர் யோசவ் வாஸ் எம் முன்னோருக்கு ஊட்டிய ஆன்மீக அடித்தளமே இன்று பெரும் கோபுரமாக எழுந்து நின்று இயேசுவை அறிக்கையிடும் சக்தியை கொடுத்துள்ளது.

கடின உழைப்பும் கடும் தவமும் புரிந்து இலங்கையின் அப்போஸ்தலராக 24 ஆண்டுகள் பணியாற்றிய யோசப் வாஸ் என்னும் ஞானச்சூரியன் 1711 ஆம் ஆண்டு ஜனவரி 16ம் திகதி தனது 60 ஆவது வயதில் கண்டியில் இயேசுவின் பாதத்தில் இளைப்பாறியது. யாக்கோமே கொன் சால்வெஸ் அடிகளும் அல்மேதா அடிகளும் உடனிருந்து மனந்திரும்புதல் மாதா ஆலயத்தில் யோசப் வாஸ் அடிகளின் புனித உடலை அடக்கம் செய்தார்கள்.

இலங்கைத் திருச்சபையின் காரண கர்த்தாவான அருளாளர் யோசப் வாஸின் புனித வாழ்வும், இறைவன் மீதும் மரியன்னை மீதும் கொண்ட அசையாத நம்பிக்கையால் இறை மகிமை விளங்குமாறு புரிந்த புதுமைகளும் இன்று அவரை புனிதர் நிலைக்கு உயர்த்தி திருப்பீடங்களில் வணங்கும் உன்னத நிலையைத் தந்துள்ளது. இலங்கையில் பணியாற்றி எமது விசுவாச உயர்வுக்காக தன்னையே அர்பணித்து, எம் நாட்டின் புனிதராக திருத்தந்தை பிரான்ஸிசால் பிரகடனப்படுத்துவது எமக்கெல்லாம் பெருமையும் மகிழ்வும் நிறைந்த நிகழ்வாகும்.

ஞான வரட்சியால் வாடி வதங்கி நின்ற ஈழத் திருச்சபையென்னும் தோட்டத்திற்கு மெஞ்ஞான நீருற்றி, தியாகத்தை உரமாக்கி, ஆன்மீக பொதுநலம் பயிர் வளர்த்து விண்ணக வாழ்வை அறுவடைசெய்ய வழிவகுத்த திருமறை விவசாயியான புனித யோசப் வாஸின் வழியில் பயணிக்க உறுதிபூணுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர் யோசப் வாஸ்

அருட்சகோ. அ.அல்வின் கிருபாகரன்
2ம் வருட இறையியல்,
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி.

இந்தியாவின் கோவா மானிலத்தின் சல்செத்தே(sakete) எனும் இடத்தில் அமைந்துள்ள சுவாரி (zuari) நதியின் தெற்குக் கரை ஓரமாய் அமைந்துள்ள சன்கோலே(sancoale) எனும் கிராமத்தில் 21 ஏப்ரல், 1651 கிறீஸ்தோப்பர் வாஸ் குடும்பத்தின் மூன்றாவது பிள்ளையாக யோசப் பிறந்தார். 8ம் நாள் இவர் திருமுழுக்கு பெற்றார். வீட்டிலும் பாடசாலையிலும் எல்லாக் குழந்தைகளிலும் மேலாக யோசப் வாஸ் அன்பிற்குரியவராகவும், அறிவுக்கூர்மையுடையவராகவும், முதன்மையானவராகவும் திகழ்ந்தார். அவர் சிறுவயதிலேயே குருத்துவ அழைத்தலுக்கான குண இயல்புகளை கொண்டிருந்தார். அவருடைய பெற்றோர் தமது வருமானத்தின் எல்லைக்குள் அவரது விருப்பப்படி வறியவர்களுக்கு உதவி செய்ய அனுமதித்தார். அவருடைய வாழ்வு முழுவதுமே வலக்கை செய்வதை இடக்கை அறியாதவாறு மிகச் சாதூரியமாக அடுத்தவர் அறியாமல் நன்மைகளைச் செய்து வந்தார்.

**புனிதரின் அழைப்பு**

யோசப் வாஸ் ஆரம்பத்தில் இருந்தே தாம் இறைவனின் குருவாக வருவதற்குரிய ஆழமான விருப்பத்தை மறைக்க முயற்சி செய்யவில்லை, ஏனெனில் அவருடைய பெற்றோரும் உறவினர்களும் தமது குடும்பத்தில் இருந்து வரக்கூடிய முதலாவது குருத்துவ அழைத்தலை ஊக்குவித்து வளர்த்தெடுக்க வேண்டிய அனைத்தையுமே செய்தார்கள். இதனால் அவருடைய அன்புத் தந்தையும் யோசப்பின் குருத்துவ உருவாக்கத்திற்காக எந்த விதமான தியாகங்களையும் செய்யத் தயாராக இருந்தார். யோசப் வாஸ் இயேசு சபையினால் நடத்தப்பட்ட புனித பவுல் கல்லூரியில் தனது இலக்கணக் கல்வியையும், தொடர்ந்து டொமினிக்கன் சபையினரால் நடத்தப்பட்ட புனித தோமஸ் அக்குவைன்ஸ் உயர் கல்விக்கூடத்தில் மெய்யியல், இறையியல், கற்கை நெறிகளையும் கற்றார். இவர் செப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப வாழ்வில் எப்பொழுதும் உறுதியாய் இருந்தார். அப்பொழுது கோவையின் ஆயரா:க இருந்த அன்ரோனியோ பிறன்டா என்பவரால் 1676 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

## இலங்கைக்கான அழைப்பு

அவர் குருவாகிப் பணி செய்த காலத்தில் தான் இறைவனிற்கும் அயலவர்களிற்கும் பணி செய்யவேண்டும் என்ற இந்த இளம் குருவின் இதயத்தை ஆண்டவர் இலங்கைத் தீவின் பக்கம் திரும்பினார். 1687ம் ஆண்டு யோசப் வாஸ் அடிகளும் அவரது பணியாளன் யோணும் இலங்கைக்கான பிரயாணத்தை ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தை நோக்கி தொடங்கிய பயணம் காலநிலை சீர்கேட்டின் காரணமாக மன்னாரில் தரை இறங்கவேண்டியதாயிற்று. சிறிது காலம் மன்னாரில் பிச்சை எடுத்தார். பின்னர் யாழ்ப்பாணத்தை அடைந்தார்.

## இலங்கையில் பணி

யாழ்ப்பாணத்தில் இருவரும் கொள்ளை நோய் ஒன்றினால் பீடிக்கப்பட்டனர். ஒரு கருணையுள்ளம் கொண்ட பெண் வழங்கிய கஞ்சியினாலும் இறைபராமரிப்பினாலும் இருவரும் மீண்டும் நடமாடத் தொடங்கினர். யோசப் வாஸ் அடிகள் தனது இலக்கை அடைவதற்கு கத்தோலிக்கரைத் தேடிக் கண்டு பிடிப்பதில் பல சிக்கல்களை எதிர் கொண்டார். ஒல்லாந்தர் கத்தோலிக்கருக்கு எதிராகக் கடைப்பிடித்த மதத் துன்புறுத்தல் காரணமாக கத்தோலிக்க விசுவாசத்திற்கான அடையாளங் களை வெளிப்படையாக அவரால் காணமுடியவில்லை. இதனால் அவர்களுடைய செயற்பாட்டினூடாகவே அவர்கள் கத்தோலிக்கரா என அறியவேண்டி ஏற்பட்டது. ஆனால் இறுதியாக வெற்றியடைந்தார்.

ஆரம்பத்தில் சில்லாலையில் மட்டும் சிறு குழுக்களாக நடு இரவில் திருப்பலியும் திருவருட்சாதனங்களையும் வழங்கியதுடன் தமக்குக் கிடைத்தவற்றை யெல்லாம் தமது தேவைக்காக பயன்படுத்தாது மனிதநேயப் பணிகளிற்காகப் பயன்படுத்தினார். 1689 டிசம்பர் 25 கிறிஸ்து பிறப்பு விழாத் திருப்பலியின் பொழுது காட்டிக் கொடுக்கப்பட்டதால் அங்கிருந்து தப்பி புத்தளம் சென்றார். அங்கே எவ்வித கெடுபிடியுமின்றி பணி செய்தார். பின்பு 1691 ஆவணி கண்டிக்குச் சென்றார். அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவாளி என இவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின் சிறையில் இருந்தே பல பணிகளைச் செய்தார். இவரை அவதானித்த அரசன் அவரிற்கு சிறிது சுதந்திரம் வழங்கினான். பின் இலங்கையின் பல பாகங்களிற்கும் சென்று தனது பணியை மேற்கொண்டதுடன் பல புதுமைகளையும் ஆற்றினார். அதுமட்டுமன்றி இலங்கையின் பல இடங்களிற்கும் கால்நடையாகச் சென்று நற்செய்தியைப் பரப்பினார். கோவாவில் உள்ள தலைமையகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பி அங்கிருந்தும் குருக்களை வரவழைத்து இறந்த கத்தோலிக்க மதத்திற்கு நீருற்று மீண்டும் துளிர்க்கச் செய்த பெருமை இவரையே சாரும்.

**வாஸ் அடிகளாரின் மரணம்**

யோசவ் வாஸ் தனது முடிவு அண்மித்து விட்டதை அறிந்திருந்தால் ஆழ்ந்த சிந்தனையிலும் தொடர்ச்சியான செபத்திலும் ஈடுபட்டிருந்தார். இவருடைய கண்ணில் இருந்து தாரை தாரையாய் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தது. பின்னர் தன்னுடன் எவரும் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். அவரும் ஒரு வார்த்தையும் பேசவில்லை. திருச்சிலுவையை உற்று நோக்கிக் கொண்டு அசைவற்றவராக நீண்ட நேரம் இருந்தார். அப்பொழுது நள்ளிரவாகிக் கொண்டிருந்தது. அவர் மரணித்த நாள் ஒரு வெள்ளிக்கிழமை. தமது 60வது வயதில் 35 ஆண்டுகள் குருத்துவ நிறைவில், 24 வருட இலங்கை மறைத் தூதுப் பணியின் பிற்பாடு 16 ஜனவரி 1711 அன்று தனது இவ்வுலக வாழ்வுப் பயணத்தை முடித்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *வாடகைத்தாய் : ஓர் ஒழுக்க இறையியல் பார்வை.*
# (Surrogate Motherhood: A Theological and Ethical Analysis)

அருட்தந்தை.தே.ரவிராஜ்
விரிவுரையாளர்,
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை.

## 1. வாடகைத்தாய்

வாடகைத் தாயா? அப்படி என்றால் என்ன? என்று எம்மில் பலர் சிந்திக்கக் கூடும். ஏன் என்றால் "வாடகைத் தாய்" எனும் சொற்பதம் எங்கள் சமூகத்திற்கு ஓர் புதிய விடயமாகவே இருக்கின்றது. இவ் விடயமானது நவீன சமூகத்தின் கண்டுபிடிப்பு என்று நான் சொல்லமாட்டேன். மாறாக இதன் வரலாறானது வேதாகமத்தின் காலத்திற்குள்ளும் புகுந்து செல்கின்றது என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

வேதாகமத்தில் சாராள் தன்னால் கருவுற இயலாது என்பதை நன்கு அறிந்து, தன் கணவன் ஆபிரகாமிடம், தன் பணிப்பெண் ஆகார் ஊடாக ஒரு குழந்தையை பெற்றெடுத்துத் தரும்படி கேட்கின்றாள். இச் செயற்பாடானது ஒரு வகையில் வாடகைத் தாய் முறையே என்கின்றார்கள் வாடகைத் தாய் முறைமைக்கு ஆதரவானவர்கள். இங்கே, குழந்தை இஸ்மயிலுக்கு, பணிப்பெண் ஆகார் உண்மையான தாயாக இருக்கின்ற போதும், ஆபிரகாம் சாராள் தம்பதியினருக்கும் ஆகாருக்குமிடையே செய்யப்படும் ஒப்பந்தமானது தற்கால வாடகைத் தாய் ஒப்பந்தத்திற்கு ஒத்ததாக அமைகின்றது என்பது இவர்களது விவாதம். அதாவது குழந்தையின் பிறப்பின் பின்னர் தாய்மையின் உரிமை மறுக்கப்பட்டு, பிறிதொரு பெண்ணிற்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில், முழுமை யாக வழங்கப்படுகின்றது என்பது உண்மை. அப்படியாயின் ஏன் இவ்விடயம் பற்றி வியப்புடன் பெரிய அளவில் இப்போது பேசவேண்டும்? என்றும் எங்களில் பலருக்கு கேள்விகள் எழலாம். உங்கள் கேள்விகள் நியாயமானதாய் இருக்கின்ற போதும் ஆய்வு செய்து பார்க்க வேண்டிய தேவை உண்டு என்பதிலும் நியாயம் இருக்கின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.1. இயல்பும் அர்த்தமும்

இந் நவீன தொழில்நுட்ப முறையின் உதவியுடன் மகப்பேறு அற்ற தம்பதியினர் வாடகைத் தாயாக செயற்பட முன்வரும் பெண்ணுடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். அதனடிப்படையில் அப் பெண்ணானவள் குழந்தையைக் கருத்தரித்த காலம் மட்டும் கருவறையில் தாங்கி பராமரித்து பின்னர் பிள்ளையைப் பெற்றெடுத்து ஒப்பந்தம் செய்து கொண்ட குறித்த தம்பதியிடம் பெற்றோருக்கான எல்லா உரிமைகளுடனும் அக் குழந்தையை ஒப்படைக்கவேண்டும். அதன் போது ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாடகைத் தாய்க்கு வழங்க வேண்டிய கொடுப்பனவு களையும், சில சந்தர்ப்பங்களில் மேலதிக மருத்துவ வசதிகளையும் வழங்க வேண்டியது தம்பதியினரின் பொறுப்பாகும். அடிப்படையில் வாடகைத்தாய் முறையானது செயற்கையானதும், வியாபார நோக்கம் கொண்டதுமான ஓர் செயற்பாடு என்பதை இங்கே அடிக்கோடிட்டு கூற விரும்புகின்றேன்.

## 1.2. வாடகைத் தாய் ஒப்பந்தம்

மேலே குறிப்பிட்டது போல இவ் ஒப்பந்தமானது வாடகைத் தாய்க்கும், அவளது கணவனுக்கும் குறிக்கப்பட்ட தம்பதியின ருக்கும் இடையே ஏற்படுத்தப்படுகின்றது. இங்கே வாடகைத் தாயாக செயற்படமுன் வருகின்ற பெண் திருமணமானவளாகவும், குழந்தையை பெற்றெடுக்கக் கூடிய தகைமை உடையவளாகவும் இருக்க வேண்டும். பொதுவாக இவ் இருபகுதியினரும் மேற்படி ஒப்பந்தத்தை மேற்கொள்ள குறிக்கப்பட்ட சட்டத்தரணியின் உதவியை நாடி வாடகைத் தாய் முறை நிகழ்வு ஒழுங்கு முறைக்கேற்ப ஒப்பந்தம் அமைக்கப்பட்டு அதிலே கையொப்பமிடுவர்.



இவ் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு முன்பு இவ்விரு பகுதியி னருக்கும் குறிக்கப்பட்ட சட்டத்தரணி இவ் ஒப்பந்தம் பற்றிய தெளிவான விளக்கத்தை வழங்குவார். இந்த ஒப்பந்தத்தில் பல விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டாலும் வாடகைத் தாயானவள் பிள்ளையைப் பெற்றெடுத்து தாய்மையின், பெற்றோரின் சகல உரிமைகளையும் எதுவித மறுப்பும் தயக்கமும் இன்றி ஒப்பந்தம் செய்யப்பட்ட தம்பதியினருக்கு வழங்க வேண்டும் என்பது குறிப்பிடப்படும் விடயமாகும். ஒப்பந்தம் மேற்கொள்ளும் போது குறிக்கப்பட்ட தம்பதியினர் தங்களுக்கான விவாகப்பதிவினை அல்லது போனால் விவாகரத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சான்றிதழை அத்தோடு மேலதிமாகக் கேட்கப்படும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் அவர்கள் இவ் ஒப்பந்த ஏற்பாட்டாளர்களால் நியமிக்கப் பட்டுள்ள உளவியல் நிபுணர் ஒருவரிடம் சென்று அவரது அனுமதியையும் பெற்றிருக்க வேண்டும். துரதிஷ்டவசமாக பிள்ளை பெறும் காலத்தில் தம்பதியினரில் யாராவது ஒருவருக்கு ஏதோ ஒரு காரணத்தினால் மரணம் ஏற்படின் குழந்தை உயிரோடு இருக்கும் மற்றைய நபரிடம் ஒப்படைக்கப்படுவார். இவ் ஒப்பந்தத்தில் மிகவும் பிரதானமான விடயம் யாதெனில் இவ் ஒப்பந்தம் பற்றிய இரகசியத் தன்மையை சம்பந்தப்பட்டவர்கள் பேணிக் காக்க வேண்டும் என்பதே ஆகும்.

**2. வாடகைத் தாய் முறையின் பிரதான பிரிவுகள்**

1987ம் ஆண்டு பேபி M (Baby M) ன் வருகையுடன் வாடகைத் தாய் முறை பிரபல்யமாகியதுடன் அது தனக்கான அங்கிகாரத்திற்கும் ஒரு வாய்ப்பைத் தேட ஆரம்பித்தது. மேலும் இச்செயற்பாட்டு முறையானது நவீன இனப்பெருக்க தொழில்நுட்ப (Modern Reproductive Technology) முறைகளின் அறிமுகங்களோடு மேலும் தன்னை மெருகூட்டிக் கொண்டது என்பது தெளிவான உண்மை. இதன் அடிப்படையில் வாடகைத் தாய் முறையை இரு பெரும் கூறுகளாகக் பிரிக்கலாம்.

I. மரபணு முறை (Genetic Method)

II. கருத்தாங்கல் முறை (Gestational Method)

வாடகைத் தாய் முறையை தம்பதியினர் பிள்ளையில்லா நிலையை நிவர்த்தி செய்யப்பயன்படுத்தும் சமூக இயக்குமுறை (Social Mechanism) என்றும் சிலர் கருதுகின்றனர். இம் முறையானது பிரதானமாக செயற்கை விதையூட்டல் (Artificial Insemination) மூலமாகவும், பரிசோதனைக்குழாய் சிசு உருவாக்கல் (in - vitro fertilization) மூலமாகவும் நிறைவேற்றப் படுகின்றது.

<u>2.1. மரபணு வாடகைத் தாய்முறை (Genetic Surrogacy)</u>

மரபணு வாடகைத் தாய் முறையில் வாடகைத் தாயானவள் தன்னுடைய கர்ப்பப்பையை மாத்திரமல்ல அக்குழந்தையின் கரு உருவாக்கத்திற்கான முட்டையையும் வழங்குகின்றாள். இங்கே மரபணு உறவு நிலையில் வாடகைத் தாயே அக் குழந்தையின் உண்மையான தாயாகவும் இருக்கின்றாள். இந் நிலையை நன்கு உணர்ந்தும் தம்பதியினர் ஏன் மரபணு வாடகைத் தாய் முறைக்கு சம்மதம் தெரிவிக்கின்றார்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளென்றால், அவர்கள் தங்களுக்கு வாடகைத் தாயூடாக கிடைக்கும் குழந்தைக்கு, தங்களில் யாராவது ஒருவருக்காகவாவது அக்குழந்தை மரபணு உறவு நிலையில் இருந்தால் கூடப் போதும், அதை நாம் நமது குழந்தையாகவே கொள்வோம் என்பது அவர்களது மனநிலை. இம் முறையில் வாடகைத் தாய் கருத்தாங்கலுக்கான விந்தை தம்பதியினரில் ஆண் துணைவரிடமிருந்தோ அல்லது பிறிதொரு கொடையாளியிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம். எது எவ்வாறாயினும் இங்கே வாடகைத் தாய் மரபணு உறவுநிலையில் அக் குழந்தையுடன் இருக்கின்றாள் என்பதே உண்மை.

### 2.2. கருத்தாங்கல் வாடகைத்தாய் முறை (Gestational Surrogacy)

மரபணு முறை போன்றல்லாமல் இங்கே வாடகைத் தாய் குழந்தையின் கரு உருவாக்கத்திற்கு எவ்வித மரபணு வழங்கலும் செய்வதில்லை. வெறுமனே அவள் பரிசோதனைக் குழாயில் உருப் பெற்ற கருவுக்கு கர்ப்பப் பையில் பராமரிப்பு உருவாக் கத்திற்கு மட்டுமே பங்களிப்பு கொடுக்கின்றனர். இதில் வாடகைத் தாய்க்கும் குழந்தைக்குமான ஓர் உயிரியல் உறவு நிலையே காணப்படும். ஆனால் இவ் உயிரியல் உறவு நிலை ஒருபோதும் அவளது குழந்தையுடான தனிப்பட்ட உறவை நிராகரிப் பதில்லை என்பதை நன்கு உணர வேண்டும்.

### 3. ஒழுக்க இறையியல் பகுப்பாய்வு




"மானிட உயிர் ஆனது அதன் கரு உருவாகும் கணத்திலிருந்து இறப்பு வரை ஒவ்வொரு இருப்பு நிலையிலும் தூய்மையானதும், புனிதமானதுமாகும். எனவே ஒவ்வொரு மானிட உயிரும் இறைவனின் ஆசீரும் கொடையுமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். ஆதலால் ஒழுக்கவியல் பார்வையில் ஓர் பொறுப்புள்ள மானிட இனவிருத்தியானது திருமண பந்தத்தில் ஏற்படும் அன்புப் பரிமாற்றத்தின் விளைவாக இருத்தல் வேண்டும். அதாவது ஒவ்வொரு குழந்தையும் ஓர் குடும்பத்தில் கணவன் மனைவியிடையே ஏற்படும் அன்புப் பரிமாற்றத்தால் விளையும் கனியாக கருதப்படும்". (Donum vitae. II.A.i).

கடவுள் மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்து அவர்கள் இருவருக்கும் கொடுத்த முதல் அழைப்பு எதுவென்றால் " பல்கிப் பெருகி பூமியை நிரப்புங்கள்" (தொ.நூல்1:28). இவ் அழைப்பை மனமுவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொண்ட மனிதன் திருமணபந்தத்தில் இணைந்து மகப்பேற்றின் ஊடாக இன்னு மோர் மனிதனுக்கு புத்துயிர் அளித்து இறைவனின் இறை திட்டத்தில் பங்கெடுக்கின் றான். திருமணம் எனும் பந்தத்தில் கணவன் மனைவி இடையே ஓர் நெருக்கமான, அத்தோடு வலுவான பிணைப்பு ஏற்படுத்தப் படுகின்றது. இப் பிணைப்பிலே கணவன்-மனைவி ஆகிய இருவரும் ஒருவருக்கொருவர் தம்மை முழுமையாக வழங்கி அதனூடாக மகப்பேற்றிற்கு வழி அமைக்கின்றனர். இவ் வழியாய் பிறக்கின்ற குழந்தை குடும்பத்திலும் சமூகத்திலும் நன்மதிப்பையும், சகல உரிமைகளையும் அது உருவாகும் கணத்தி லிருந்தே பெற்றுக் கொள்கின் றது. இவ் அந்தஸ்தானது அக் குழந்தைக்கு ஆரோக்கிய மானதோர் அடையாளத்தை வழங்குவதோடு, அதன் முழு மானிட வளர்ச்சிக்கும் வழி அமைக்கின்றது.




வாடகைத் தாய் முறை யானது நவீன இனவிருத்தி தொழில் நுட்ப முறையின் ஓர் வடிவமாதலால் திருமணத் தினதும், குடும்பத்தினதும் அடிப்படை விழுமியங்களை வேரறுத்து விடுகின்றது. நவீன இனவிருத்தி தொழில் நுட்ப அறிமுகமும், மூன்றாவது நபரின் தலையீடும் குடும்ப வாழ்வின் அர்த்தத்தையும் பெற்றோருக்கான தகமையையும், பாலியல் உறவையும், இனவிருத்தியையும் கேள்விக் குறியாக்கி விடுகின்றது. இங்கே பெரும்பாலும் இனவிருத்தியானது பாலியல் உறவு நிலையிலிருந்தும், கருத்தாங்கலி லிருந்தும் ஈற்றில் குடும்ப வாழ்வில் இருந்தும் முற்று முழுதாக பிரித்தெடுக்கப்பட்ட செயற்பாடாக இருக்கின்றது. இதனால் இச் செயற் பாடானது குடும்பத்தின் அடிப்படைக் கட்டுமானத்தைக் குலைப்பதோடு மட்டுமன்றி சமுகத்தினதும் அடிப்படைக் கட்டுமானத்தையும் குலைத்து நிற்கின்றது.

இனவிருத்தியானது வாடகைத் தாய் முறையின் ஓர் இன உற்பத்தியாக கருதப்படுகின்றது. மாறாக இனவிருத்தியானது குடும்ப வாழ்வின் உடைமையாக இறைவனால் ஏற்படுத்தப்பட்ட விடயமாகும். இது குடும்ப வாழ்வின் நோக்கங்களில் ஒன்றாகவும் இருக்கின்றது. திருமணமே பருவ நிலை எய்திய ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் தாய் தந்தையாகும் வாய்ப்பை வழங்குகின்றது. இதனடிப்படையில் ஓர் குழந்தை இயல்பாகவே தனது குடும்பம் என்கின்ற வட்டத்திற்குள் தனது சொந்தப் பெற்றோர் ஊடாக பிறக்கின்ற உரிமையை பெற்றுக் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு காரணத்திற்காகவும் மனிதன் மானிட உயிரை தனது கையில் எடுத்தக் கொள்ளக் கூடாது. மாறாக இறைவன் அதை கரத்தில் விட்டுவிட வேண்டும். ஏனென்றால் மானிட உயிரானது இறைவன் எங்களுக்கு அளித்த உன்னதமான கொடையாகும். அவரே அதன் தொடக்கமும், முடிவுமாக இருக்க வேண்டும். தொழில்நுட்பங்கள் எப்பொழுதும் மானிட வளர்ச்சிக்கு உதவியாக இருக்க வேண்டும். அதே வேளையில் அவை எப்போதுமே இயற்கை விதிகளோடு இணைந்தே செயற்பட வேண்டும். வாடகைத் தாய் முறையில் பயன்படுத்தப்படும் இனவிருத்தி தொழில் நுட்பங்கள் மனிதனை ஓர் உற்பத்திப் பொருளாக கணிப்பிட வைத்து அவனது மனித மாண்பை இழிநிலைக்கு தள்ளுகின்றது. அதே வேளையில் தாய்மை எனும் உன்னதமான நிலையை இழிநிலைக்கு தள்ளுவதோடு கேள்விக்குறியாக்கியும் நிற்கின்றது.

**முடிவுரை**

வாடகைத் தாய் நடைமுறையானது மனித மாண்பை இழிநிலைப் படுத்துவதோடு குடும்பத்தின் அடிப்படை இயல்பையும், கட்டுமானத்தையும் சீர்குலைத்து நிற்கின்றது. மேலும் இம் முறையானது மனிதனை ஓர் உற்பத்திப் பொருளாக்குவதோடு ஒரு தாயின் கருவறையை ஒரு தொழிற்கூடமாக்கி நிற்கின்றது. இச்சந்தப்பத்தில் பிள்ளைகள் அற்ற தம்பதியினரின் நிலையை நினைத்துப் பார்க்கும் இடத்தில் அது ஒரு வேதனைக்குரிய விடயமாகத்தான் இருக்கின்றது. ஏனெனில் குழந்தைகள் பெற்றோரினது அடையாளமும், எதிர்காலமும் ஆகும். அதே வேளையில் பிள்ளைகள் இல்லா நிலை என்பது திருமணத்தின் அடிப்படை இயல்பை ஒருபோதும் நிராகரிப்பதில்லை. பிள்ளைகள் இறைவனின் கொடையும் அவரது திட்டமுமாக இருப்பதனால் பிள்ளைகள் அற்ற தம்பதியினர் வாடகைத் தாய் முறையைக் கைவிட்டு பெற்றோரை இழந்து நிற்கும் பிள்ளைகளை தத்தெடுத்து அப் பிள்ளைகளுக்கு பெற்றோராக மாறுவதுடன் சமூகத்திலும் ஓர் அன்புப் பணியை ஆற்றும் மன நிறைவுடன் வாழ முடியும் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக இசைவாக்கமும் குடும்பமும்

அருட்தந்தை எஸ்.ஜெ.இராஜநாயகம்
இயக்குனர்,
அகவொளி.

"மனிதன் ஒரு சமூகப்பிராணி" என்று மெய்யியல் மேதை அரிஸ்டோட்டில் கூறினார். இவ்வுலகில் ஒரு மனிதன் தனித்து வாழமுடியாது. அவன் வாழ்வதற்கு பிறரின் உதவி தேவை என்பது தவிர்க்க முடியாது. அதே வேளையில் ஒரு மனிதன் குறிப்பிட்ட சூழலில் வாழ்கின்றான். குறிப் பிட்ட சூழலும் அவன் மீது செல்வாக்குச் செலுத்துகின்றது. அவனும் சூழலில் செல்வாக்குச் செலுத்துகின்றான். ஏனெனில் மனிதன் சமூதாயத்தில் இயங்குகின்றான், எதிர்த்து இயங்குகின்றான், பரஸ்பரம் இயங்குகின்றான். Man is acting, interacting and reacting member in the society. இதன் அடிப்படையில் மனிதன் எப்படி உருவாகின்றான், உருவாக்கப்படுகின்றான் என்பதைப்பற்றி இங்கு ஆராய்வோம்.



## சமூக இசைவாக்கம்

சமூக இசைவாக்கம் என்பது ஒருவர் மற்றவரிடமிருந்து கற்கும் முறையாகும். ஒருவன் இவ்வுலகில் பிறக்கும்போது அவன் மற்றவரிடமிருந்து கற்கின்றான், மற்றவரும் இவனிடத்தில் இருந்து கற்றுக்கொள்கின்றனர். குறிப்பாக ஒரு குடும்பத்தில் ஒருவன் பிறந்த நேரமுதல் பெற்றோரிடமிருந்தும் சகோதரர், சூழல் என்பவைகளிலுமிருந்தும் கற்றுக்கொள்கின்றான். இங்கு பெற்றோர்தான் முதல் ஆசிரியர்களாகின்றனர். இதனால் இந்தக் கற்றல் அனுபவங்களினூடாக பல எண்ணக்கருக்களையும், திறன்கள், மதிப்பீடுகள், கருத்துக்கள், விளையாட்டு, கலை, சங்கீதம் என்பவைகளைக்கற்று, இவற்றினூடாக குறிப்பிட்ட சிந்தனைகள் நடத்தைகளை உள்வாங்கிக் கொள்ளுகின்றான்.

## சமூக இசைவாக்கத்தின் 6 முறைகள்

பின்வரும் முறைகள் ஊடாக இவ்வுலகில் ஒருவர் சமூக இசைவாக்கம் பெறுகின்றான்.

1. பற்றுறவு (Attachment) முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தொழிலி (Operant) முறை
3. அறிக்கை (Cognitive) முறை
4. கவனித்தல் (Observation) முறை
5. சமூக கலாச்சார (Culture) முறை
6. தொழிலி பயிற்சி (Apprentice) முறை

இவைகள் ஒவ்வொன்றின் மூலமாக ஒருவன் கற்று, உள்வாங்கி அதனை தனது வாழ்வில் பிரயோகித்து தனது வாழ்வைக் கட்டியெழுப்பி வாழ்கின்றான். இவைகளை நாம் விரிவாக இங்கு ஆராய்வோம்.

**பற்றுறவு முறை சமூக இசைவாக்கம்**

குழந்தையானது ஒரு குடும்பத்தில் பிறக்கின்றபோது பெற்றோரின் அளவு கடந்த அன்பு, அரவணைப்பு, ஆதரவு, பாதுகாப்பு என்பனவற்றின் மூலம் பெற்றோர் தம் குழந்தையினிடம் உறவாடுகின்றனர். இந்த வலிமை மிக்க உறவின் அனுபவ மூலம் ஒருவர் வாழ்வின் அடிப்படையான நம்பிக்கை, பாதுகாப்பு என்ற இரு உணர்வுகளைப் பெற்று வாழ்வார். அந்த இரு உணர்வுகளும் போதியளவு ஒருவருக்கு கிடைக்கும் பட்சத்தில் பெற்றாரிடமிருந்து நல்ல நடத்தைகள், எண்ணங்கள் என்பவற்றைக்கற்று நல்ல உணர்வுகளுடன் வாழ்வர். இப்படியாக ஒரு குழந்தை தனது பெற்றார், உறவினர், சகபாடிகள், வாழும் சூழலால் இசைவாக்கம் பெற்று நேரான அல்லது எதிரான மனப்பாங்கு உருவாக்கி வாழ்கின்றது.



**தொழிலி முறை சமூக இசைவாக்கம்.**

இங்கு ஒருவர் தன் நடத்தையை மற்றவரிடமிருந்து வரும் பின்னூட்டல் பதில் மொழியால் மெருகூட்டுகின்றார். இங்கு மற்றவர் ஒருவருக்குக் கொடுக்கப்படும் பின்னூட்டல்களால் உற்சாகமடைந்து நடத்தையைத் தொடர்கின்றார் அல்லது மாற்றுகின்றார் அல்லது தொடராமல் நிறுத்துகின்றார். இது ஒரு நடத்தை வாதிகளின் கோட்பாடுகளுக்கேற்ப நடைபெறுகின்றது. பரிசு, தண்டனை வழியாக ஒருவர் தன் நடத்தையைத் தொடரவோ மாற்றியமைக்கவோ அல்லது நிறுத்தவோ செய்கின்றார். பெற்றார்கள் அல்லது பெரியவர்கள் ஒருவருக்குக் கொடுக்கும் மீள் வலியுறுத்தல்களால் அவர் தனது நடத்தையை சமூகத்திற்கு ஏற்றாற்போல் நடந்து சமூக இசைவாக்கத்கைப் பெறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிகை முறை சமூக இசைவாக்கம்**

இங்கு குறிப்பிட்ட சிந்தனை முறைகளால் ஒருவர் கற்கின்றார். இந்த முறையானது கற்பித்தல், வழிகாட்டுதல், நியாயித்தலில் (Reasoning) தங்கியிருக்கின்றது. அறிகை முறையில் நியாயித்தலுக்கு மிகுந்த தேவையிருக்கின்றது. இதை அனுபவமூடாகக் கற்கும் முறையாகவும் கொள்ளலாம்.

1. உய்த்துணர்வு நியாயித்தல் (Inductive Reasoning) குறிப்பிட்ட நிகழ்விலிருந்து பொது விதிகளுக்கு வருதல்.
   உ+ம் - ஒருவர் களவு செய்கின்றார் - களவெடுத்தல் தீயது
2. பிரித்தெடுக்கும் நியாயித்தல் (Deductive Reasoning): பொது உண்மையிலிருந்து பிரித்தெடுத்து குறிப்பிட்ட நிகழ்வுக்கு பிரயோகித்தல்.
   உ+ம் - களவெடுத்தல் தீயது – களவு செய்தல் கூடாதது
3. குறிப்பிட்ட நிகழ்விலிருந்து குறிப்பிட்ட நிகழ்வுக்குப் பிரயோகித்தல் (Transductive Reasoning)
   உ+ம் - களவு செய்தல் எப்போதும் கூடாதது

**கவனித்தல் முறை சமூக இசைவாக்கம்**

நடத்தைவாதி அல்பேட் பண்டுராவின் கொள்கையின் படி மக்கள் சமூதாயத்தில் இருப்பதைப் பார்த்துக், கவனித்துத் தாமும் அதே மாதிரி நடக்கின்றனர். இங்கு மற்றவரின் வகிபங்கு, நடத்தை, மதிப்பீடுகள் அனைத்தையும் தமதாக்கிக்கொண்டு வாழ்வர்.

இங்கு மற்றவருடைய நடை, உடை பாவனையைக் கவனித்து அவரின் வகிபங்கைத் தனதாக்கிச் செயற்படுவார். இது ஒரு அவதானித்துக் கற்றல் முறையாகும். இங்கு ஒருவர் மற்றவரின் நடத்தை, எண்ணங்கள், உணர்வுகள் என்பவற்றால் செல்வாக்குப் பெற்று இசைவாக்கமடைகின்றார். சிறு பிள்ளைகள் அம்மா அப்பாவைப் பார்த்து தானும் அப்படியே செயற்படுதல், சிறுவர் பருவத்தில் சகபாடிகளைப் பார்த்து தாமும் அப்படியே செயற்படுதல் வாலிப வயதில் ஊடகங்கள், சகபாடிகளூடாகத் தாம் பார்த்தது போல செயல்படுதல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த பரம்பரையினர் தற்போதைய பரம்பரைக்கு தாம் பரம்பரை பரம்பரையாக கற்று வந்ததையும், தமது கலாச்சார நடைமுறைகளையும் மதிப்பீடுகளையும் கற்றுக் கொடுக்கின்றனர். இவர்களும் அப்படியே கற்று பின்பு வரவிருக்கம் சந்ததியினருக்கும் வழங்குகின்றனர். உல்லாச் சந்ததியினரும் வாழையடி வாழையாக கலாச்சார முறைகளுக்கு இசைவாக்கம் பெறுகின்றனர்.

பெற்றார்கள் தமது பிள்ளைகளை வளர்க்கும் கோலங்களில் 4 வகைகளைக் கடைப்பிடிக்கின்றனர். இதனூடாகவும் அவர்கள் இசைவாக்கம் பெற்றுத் தமது வாழ்வை அமைக்கின்றனர்.

**1.சர்வதிகாரக் கோலம்:-**

இங்கு பெற்றார் உச்ச நிலைக் கட்டுப்பாட்டை பிரயோகிக்கின்றனர். இது ஒரு இராணுவ அமைப்பைப் போன்றன. கட்டளைகளின் படி நடவாமல் விட்டால் அங்கு தண்டனைகள் வழங்கப்படுகின்றது. இங்கு மிகவும் குறைந்த நிலையில் உரையாடல், அன்பு, ஆதரவு காணப்படும். எப்போதும் பெற்றோரைத் திருப்திப்படுத்துகின்றவராக வாழ்வர். பெற்றோரும் தம் பிள்ளைகளிலிருக்கும் ஆற்றல்கள் திறமைகளை இனங்கண்டு தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தாமல் இவர்களைத் தமது வாழ்வுக்கும் மகிழ்வுக்கும் உதவும் பொருளாகப் பயன்படுத்துவர். இதனால் பாடசாலையிலும் பிள்ளைகளுடைய ஆற்றுகை குறைந்து, குறைந்த புள்ளிகளையே பெறுவர். இவர்கள் தனிமையையே விரும்புவர்.

**2.அதிகாரக் கோலம்:-**

இது சர்வதிகாரக் கோலத்திற்கு எதிர்மறையானது. இங்கு கட்டுப்பாடும் அன்பும், ஆதரவும் இருக்கும். அதே நேரத்தில் கண்டிப்பும் தண்டணைகளும் வழங்கப்படும். சிறந்த உரையாடல் பேணப்படும், பிள்ளைகளின் ஆற்றல்கள் திறமைகளை தட்டிக்கொடுத்தும், உற்சாகப் படுத்தியும் உதவிசெய்தும் வாழ்வர். அதனால் பிள்ளைகள் பாடசாலையில் கூடிய புள்ளிகளைப்பெற்றும், உயர்ந்த சுய நம்பிக்கையுடனும், மற்றவர்களுடன் நட்புறவுடனும் பழகுவர். இவர்களுடைய வாழ்வு மகிழ்ச்சிகரமாகவே இருக்கும். பாடசாலையில் நல்ல ஆற்றுகையிருக்கும், கூடிய புள்ளிகளும் பெறுவர்.

**3.இழக்காரமான கோலம்:-**

இங்கு பெற்றார் தம்பிள்ளைகளுக்கு கட்டுப்பாடு இல்லாமல் அதீத சுகந்திரத்தைக் கொடுப்பர். இதனால் பிள்ளைகள் தாம் நினைத்த மாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் நடப்பர். இப்படியானவர்கள் கூடிய மனவழுத்தங்க ளுக்கு ஆட்பட்டு விரைவில் மனமுடைந்து போவர். கட்டுப்பாடு இல்லாததால் வீடு ஒரே அமர்க்களமாக இருக்கும், வேண்டாத பிரச்சனை களுக்கும் உட்படுவர்.

### 4. அக்கறையின்மை, வேண்டா வெறுப்பு கோலம்:-

இங்கு பெற்றார் பிள்ளைகள் மீது அக்கறையற்றுக் காணப்படுவர். பிள்ளைகளுடைய வளர்ச்சியில் ஏனோதானோ என்றிருப்பர். பிள்ளைகள் என்ன செய்தாலும் கவலைப்படமாட்டார்கள். இதை நாம் ஒரு புறக்கணிப்பு என்றும் கூறலாம். பெற்றார் தம் பிள்ளைகளின் நலன்களில், கல்வி, சுகாதாரம், நன்னடத்தை என்பனவற்றில் கவனயீனமாக இருப்பார். இவர்கள் கீழ்நிலை சுயமதிப்புள்ளவர்களாகவும், அதீத உணர்வழுத்தங் களால் வன்முறையுள்ளவர்களாகக் காணப்படுவர். பள்ளிக்கூடத்தில் குறைந்த புள்ளிகளைப் பெறுவர். உற்சாகமற்ற நிலை இவர்களில் காணக்கூடியதாக இருக்கும்.

**இனிச் சமூக இசைவாக்கத்தின் முகவர்கள் எவை என்பதைப்பற்றி நாம் ஆராய்வோம்.**

### 1.முதல்நிலை முகவராக குடும்பம் செயற்படுகின்றது

குடும்பச் சூழல் பாதுகாப்பானது. இங்கு ஒருவர் தன் மனவெழுச்சிகளைக் கண்டு கொள்ள குடும்பமானது கூடிய ஆதரவைக் கொடுக்கின்றது. அதே நேரத்தில் குடும்பம் ஒரு சிறிய சமூகமானதால் அங்கு சில கட்டுப்பாடுகளும், ஒழுக்கமுறைகளும், விதிகள் / சட்டங்களும் இருக்கின்றன. இவைகள் ஒவ்வொருவரினாலும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இவைகளுக்கு எதிராகப் போகும்போது முரண்பாடுகள் தோன்றும். இதனால் இவைகளைக் கடைப்பிடிக்க இங்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றது. பரிசு, தண்டனையை பெற்றோர்கள் வழங்கி பிள்ளைகளை வளர்க்கின்றனர். பெற்றோர் நல்லொழுக்கம், நல்ல மதிப்பீடுகள், பொறுமை, தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் (Tolerance), கருணை, பரிவு, அன்பு, மன்னித்தல் என்ற பண்புகளுடன் தமது பிள்ளைகளை வளர்ப்பர். பெற்றோர் தம் பிள்ளைகளை வெற்றிகரமாக கையாளாது போனால் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பயங்கர விளைவுகளை உண்டாக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2. சகபாடிகள்

ஒரு பிள்ளையினுடைய வாழ்வில் 4 வயதிலிருந்து சகபாடிகளின் செல்வாக்கு செலுத்துதல் தொடங்குகின்றது. சகபாடிகள் பெற்றோரின் வகிபங்கை எடுக்கின்றனர். மீண்டும் மீண்டும் பெற்றோர் தம் பிள்ளைகளைப் பின் தொடர்ந்து அவர்களுடைய நடத்தைகள், எண்ணங்கள், உணர்வுகளை மதிப்பிட்டு நல்ல வழிகாட்டிகளாக மாறவேண்டும். இந்தச் சகபாடிகளுடைய செல்வாக்கு பதின்மவயதில் மிகவும் கூடியதாக இருக்கும். பின்பு மறைந்து ஊடகம் சார்ந்து இருக்கும்.

### 3. ஊடகம்

சமூகத்தில் இது முக்கியத்துவம் பெறுகின்றது. தனிநபரில் இது அனுதினமும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இவைகள் பல வடிவங்கள், கோலங்களில் ஒரு நபரை வந்தடைகின்றன. நாளிதழ், செய்திகள், நூல்கள் என்பனவும், கைத்தொலைபேசி, கணனி, ருவீட்டர், முகநூல் (Face Book), ஈமெயில், வலைப்பின்னல் (Internet), தொலைக்காட்சி என்று பல பல. இவைகள் எல்லாம் மனிதர்களை நுகர்வோராக மாற்றி கோடிக்கணக்கில் செலவு செய்யத் தூண்டுகின்றன. இவற்றில் நன்மைகளும் கிடைக்கின்றன, தீயவைகளும் வந்து சேர்கின்றன. இங்கு ஒருவர் அன்னமாக மாறி நல்லதை எடுக்கவேண்டும். தீயவைகளை புறந்தள்ள வேண்டும். பன்னாடை போல இருக்கக் கூடாது. இதற்குத் தகுந்த பயிற்சியைக் குடும்பம் வழங்குதல் சிறப்பாக இருக்கும்.

### 4. சமயங்கள்

கட்டுப்பாடுடனும் பொறுப்புடனும், சமய மதிப்பீடுகளின் அடிப்படையில் ஒழுக்கமாக வாழத் தூண்டுகின்றது. மனிதனை மாண்புடன் வாழ வழிசமைக்கின்றது. அன்பு, பொறுமை, சமாதானம், மன்னிப்பு, பரிவு, இரக்கம், தாழ்ச்சி, ஒருவரொருவரைத் தாங்கிக் கொள்ளுதல் என்ற புண்ணியங்களுடன் வாழக் கற்றுக்கொடுக்கின்றது. இன்று சமயங்களில் அடிப்படைவாதம் தோன்றி மனிதரைக் கலகக்காரர்களாக மாற்றுகின்றது. உ+ம் பொதுபலசேனா, தலிபான் அடிப்டைவாத கிறிஸ்தவ குழுக்கள். மதங்கள் தமது உயரிய குறிக்கோள்களை மறந்து வன்முறைக் கலாச்சாரத்தை தோற்றுவித்து மனித மாண்பைச் சிதைக்கின்றன. இது பற்றி நாம் விழிப்பாக இருப்பது நமக்குப் பயன்தரும்.

### 5. பள்ளிக்கூடங்கள்

கல்வி ஒருவனுடைய மனதைப் பண்படுத்துகின்றது. கல்வி கட்டுப்பாடுடனும் மதிப்பீடுகளுடனும் வாழ உதவி செய்கின்றது. கல்வி எமது ஆற்றல்கள், திறன்களை வளர்த்து நம்மை ஒரு வளம் நிறைந்தவராக்குகின்றது. இதனால் மக்களும், நாடும் சிறப்புறுகின்றது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோண் F. கெனடி கூறுகின்றார். கல்வி ஒரு சக்திமிகு ஆயுதம், இதனால் உலகத்தையே மாற்றலாம் - நெல்சன் மண்டேலா. நுண்ணறிவும், பண்பும்தான் நல்ல கல்வியின் விளைவு என்கிறார். – மாட்டின் லூதர்கிங். கல்வி தனிநபரை மாற்றி உலகத்தையே மாற்றும் வல்லமையைக் கொண்டுள்ளது.

**முடிவுரை**

இப்படியாக ஒரு தனிநபர், குடும் பத்தில் இசைவாக்கம் பெற்று சமூகத்தில் வாழ்கின்றார். இத்தகைய சமூக இசை வாக்கம் நல்லதாகவும் வாழ உதவுகின்றது, எதிர்மறையாவும் வாழ உதவுகின்றது. பிள்ளைகளுடைய வளர்ப்பில் பெற்றார்கள் மிகவும் விழிப்புடையவர்களாக இருக்க வேண்டும். உதாரணமாக, கொழும்பு நகரில் பம்பலப் பிட்டியிலிருக்கும் அடுக்கு மாடிகளில் வாழும் குடும்பங்களில் இளையோராக இருப்பவர்கள் மட்டில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. இவர்களில் போதைவஸ்து, மதுப்பாவனை யாளர்கள் காணப்பட்டனர். எப்படிப்பட்ட குடும்பங்களில் இது நடை பெறுகின்றது என்பதை ஆய்வு செய்த போது இருவிதமான குடும்பங்களை இனங்கண்டனர்.

1. நல்ல குடும்பம் சிறந்த மதிப்பீடுகளையும் கட்டுப்பாடுடன் கூடிய அன்பும், ஆதரவையும் கொடுத்துப் பிள்ளைகளை இறைபக்தியில் வளர்த்தனர். இத்தகைய குடும்பங்களில் போதைவஸ்து, மதுப்பாவனைகள் காணப்படவில்லை.
2. கூடாத குடும்பம் - அன்பு, ஆதரவு குறைந்த நிலை, கட்டுப்பாடு, கண்டிப்பு இல்லை, அதீத சுதந்திரம், பெற்றார்கள் சிறந்த மாதிரிகளாக இல்லை என்பன பிள்ளைகளைத் தீய வழியில் செல்ல வழிவகுக்கின்றன. இதனால் சகபாடிகளின் அழுத்தங்களால் போதைவஸ்து, குடி என்பனவற்றுக்கு அடிமைகள் ஆகின்றனர் என்ற உண்மை வெளிவந்தது.

சமூக இசைவாக்கத்தின் முதல்நிலை முகவராக குடும்பம் இருக்கின்றது. எனவே ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள பெற்றோர்கள் தம் பிள்ளைகள் நன்றாக வளரக்கூடிய சூழலை உருவாக்க வேண்டியது தம் தலையான கடமை என்பதை மறக்கக் கூடாது. பிள்ளைகளுக்குப் பெற்றார் சிறந்த மாதிரியாக விளங்க வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளுடன் நல்ல முறையில் தொடர்புகளை உண்டாக்கி உரையாடல் செய்து இறைபக்தியை ஊட்டி பிள்ளைகளுக்கு நல்ல வழிகாட்டிகளாக இருப்பது காலத்தின் தேவையாகின்றது. இவைகளை வெற்றிகரமாக பெற்றோர்கள் கையாண்டால் குடும்பமும் வளரும். சமூதாயமும் செழிப்புறும்.

வாழ்க குடும்பம்! வளர்க வையகம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி நிகழும்?

ஒரு சமுத்திரம்
பனித்துளியாய்ப்
பிறக்கிறது

ஒரு வானம்
குட்டிமேகமாகி
மாட்டுக் கொட்டிலில்
கிடக்கிறது



ஒரு பிரபஞ்சச் சூரியன்
குப்பி விளக்காகும்
அதிசயம்
நடக்கிறது

ஒரு வான் நிலா
மின்மினிப் பூச்சியாய்
வைக்கோல்மீது
சிரிக்கிறது



ஒரு அரசன்
அனாதைபோல
ஆட்டுக் கொட்டிலில்
பிறக்கிறார்

ஒரு கடவுள்
மனிதனாகி
மண் மடியில்
தவழ்கிறார்

இவை எப்படி நிகழும்?

கடவுளால்
முடியுமே எல்லாம்

சி. அஜந்தன்
2ம் வருட இறையியல்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நத்தார்- புதிய ஒளியும் வாழ்வும்...

நதியோடு கடலாக பூவோடு மணமாக
மண்ணோடு மழையாக வானோடு நிலவாக
மனிதத்தோடு புனிதமொன்றாய்க் கரைந்திடும் நாள்...

பாவத்தின் பளுவால் பாதைகள் மாறி
ஆன்ம பசியால் அலைந்திடும் மானிடத்தை
உயிர் கொடுத்தே இறையுடன் இணைத்திடும்
'உணவு' உருவெடுத்த உன்னத நாள்...

உண்மைகள் ஊமையாகி நீதி துருப்பிடித்து
அமைதியெங்கும் விழுப்புண்களாகி
உணர்வின்றி அவதியுறும் அவனிக்கு உறுதியூட்ட
'உண்மை' உதித்த உயர்ந்த நாள்...

துன்பச் சூறாவளியால் வாடி நிற்கும் விருட்சமாய்
வாழ்வில் சுகம் தொலைத்து வசந்தத்துக்காய் ஏங்கும்
மனிதக் கொடிகள் இணைந்தே ஊட்டம் பெற
'திராட்சைச் செடி'யொன்று துளிர்த்திடும் தூய நாள்...

அரசியலிலும் அடக்குமுறையிலும்
சிற்றின்பத்திலும் சீர்கேட்டிலும்
புயலில் சிக்கிய புறாக்களாயத் திசைமாறி
வரலாற்றின் காயங்களால் வாழ்வின் முகவரியிழந்து
தொலைந்துபோன மனித மந்தைகளை
தேடி மீட்க 'நல்ல ஆயன்' அவதரித்த
ஆனந்தத் திருநாள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகள் தேடித் தொலைந்த இதயங்களுக்கு
விடியல் காண ஏங்கும் விழிகளுக்கு
விட்டில் பூச்சிகளாய் தப்பான வழி சென்று
தடுமாறித் தவித்திடும் தரணிக்கு
இறை 'வழி'யொன்று திறந்திடும் இனிய நாள்...

அன்பொன்றே ஆயுதமாய் அகிலமாழ வந்த
இறை 'அரசனின்' மழலைச் சிரிப்பிலே
மறையட்டுமெம் இருண்ட பக்கங்கள்
புதியதோர் அத்தியாயம் திறப்போம்
மரிமைந்தன் விழிகளின் 'ஒளியில்'...

அ. துஷ்யந்தன்
4ம் வருட இறையியல்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Synopsis

## Stumbling blocks became stepping stones in the life of Blessed Joseph Vaz

This article portrays some obstacles and trials that came across in the mission and life of Bl. Joseph Vaz and how he made them positive for his ministry through the Providence of God. Man approves but God disapproves because God's ways are different from that of men. In the Bible also we see some incidences that we cannot understand through our human wisdom. In Genesis we see that Joseph is sold to foreign merchants and at last he becomes the authority to help his own people. In the life of saints too we notice ample examples that show the plan of God through the sorrowful and painful experiences of their lives. We see the same in the life of Bl. Joseph Vaz.

After his ordination he was not sent to any mission. So, he went to serve his people in his own village where he came to know the critical situation in Sri Lanka. Then he decided to come to Sri Lanka than being idle without any mission. Unfortunately he was sent to Kannara by the Arch bishop. He went there out of obedience and served. At that time Kannara was administered by the Dutch from Colombo. This period really helped him to plan out how to enter into Sri Lanka and start his mission.

When Fr. Vaz started his journey to Sri Lanka there were three including his faithful servant John. But knowing that it is a risky journey the two missionaries refused to join Fr. Vaz. Later Fr. Vaz realized that it is also good and easy to move about and find food and hide if there are threats from the Dutch.

Fr. Vaz and his servant were affected seriously by diarrhoea when hey reached Jaffna. This experience set their mind and spirit to go forth in helping the patients who were suffering from pestilence in Kandy courageously.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

On a Christmas Eve Fr. Vaz planned to have three masses in three different places. This news was known by the Dutch and they came there to arrest Fr. Vaz. But miraculously he escaped from there and went to Kandy through Vanni and Puttulam.

In Kandy Fr. Vaz was suspected of being a spy of the Portuguese and arrested by the king. In the prison he learnt Sinhala and wrote some books. When there was a severe famine in Kandy Fr. Vaz was asked to pray for rain and God answered him. This made the king to think that he is a saintly man. Then the king gave freedom to Fr. Vaz to do his preaching and religious worship in his territory.

His humility and simplicity changed the attitude of those who tried to put him in trouble. Seeing all the hindrance and hurdles the never retreated from his mission. He faced them all with the grace of God and set an example to make use of all the negatives into positives through the Providence of God.

## Blessed Joseph Vaz – The Morning Star

There are documentary evidences to prove the existence of Christianity in the 6th Century AD in Sri Lanka. However, Catholicism spread and flourished during the period of the Portuguese in Sri Lanka. In the late 17th century when the Dutch captured Sri Lanka, immense efforts were taken to do away with the existence of Catholicism in Sri Lanka. The people in the country underwent severe persecutions and still preserved their noble faith despite the absence of even a single Catholic Priest and the celebration of the Sacraments.

It is in this situation that Fr. Vaz, having been guided by the Providence of God, arrived in Sri Lanka to revive the Catholic faith that was at the brink of death. He started his missionary works in Jaffna and quietly in disguise went around the country identifying and strengthening the Catholics in their faith. Fr. Vaz led a humble and simple life, while converting thousands to the Catholic faith. He was called a saintly priest by the people and by the two Buddhist kings.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Fr. Joseph Vaz was very dedicated to our Lady and therefore, he was buried in the chapel of Our Lady of Conversion. The missionary success he attained is a clear sign of his love of God and neighbour. He loved to work for the poor and ready to die for them. Hence, one cannot comprehend the prevalence of Catholicism in Sri Lanka without having the knowledge about Fr. Joseph Vaz. Thus, every Catholic in Sri Lanka is proud to call Blessed Joseph Vaz "The Apostle of Sri Lanka." Let us also imbibe his saintly qualities in our lives and follow in his foot steps.

## Surrogate Motherhood – Theological and Ethical Analysis.

Surrogacy is a social arrangement characterized by the intention to separate genetic and gestational aspects of child – bearing especially, when a female partner is a infertile intertie or unable to carry a child to term.The surrogate agrees with the contracting couple to become pregnant in order to give birth to a child for them.

Surrogacy arrangement is based on agreement or contract between the surrogate and her husband, and natural father, and his wife, the adoptive mother. There are a number of things taken into consideration in the contract by the parties. Major stipulation is that the surrogate has to surrender the parental rights to the adopting parents at the birth of the Child. Due to the psychological attachment created between the child and mother during the pregnancy period, there is a possibility that a surrogate will change her mind during the course of the pregnancy to keep the baby for herself. Therefore, more attention is paid in the contract to the surrendering of the parents rights to the adopting parents at the birth of the child. Both parties are supposed to produce their marriage certificates and if this surrogate is divorced, the divorce



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

certificates and also the other documents requested by the program or any party's attorney must be produced.

There are two major types of surrogacy known as 'genetic' and 'gestational' In generic surrogacy, the surrogate contributes both egg and womb to the contracting couple. A surrogate is needed for the couple only for the gestational service.

When we analyse this matter theologically and ethically we come to know that God as the creator of man, invites the spouses in marriage to be fruitful and multiply. willingly accepting the invitation of God, in marriage, the spouses participate in His creative plan through the transmission of new life. Surrogacy as a result of reproductive technology degrades the fundamental values of family & marriage. Invention of reproductive technology and third party involvement challenge us to articulate shared value about the meaning of family life, parenthood, sexuality, and procreation. Procreation becomes family production in surrogacy. Procreation of children is the proper good of marriage, intended by the ordinance of the creator himself. Therefore procreation should not take place out side the marriage bond.

**Surrogacy is opposed by many for the reason of using an artificial means for procreation and damages the dignity of the surrogate and the child as persons.**

## Social And Family Familiarization

A great philosopher Aristotle says " Man is a social Being" Man cannot live alone. We cannot deny that he needs other's help. Man is living in a particular society. The society has an impact on him. He also impacts the society. Man is an acting, an interacting and reacting member in the society.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Social Familiarization

Every man learns from the other. From his birth onwards he is learning. Others also learn from him. Parents are the first teachers. Through this learning he comes to know values, sharing, games, art and music

There are six dimensions in this stage

- Attachment
- Operant
- Cognifive
- Observation
- Culture
- Apprentice

**Attachment**

When a child is born in a family it learns and experiences from the parents. through this, one learn the feeling & protection.

**Operant**

Here a person gets the encouragement from the elders & from the others. Through this he can learn how to live according to those values.

**Cognitive**

Here one learns from Reason . This method is achieved through teaching through teaching, directing and Reasoning There are three methods of reasoning.

1. Inductive Reasoning
2. Deductive Reasoning
3. Transductive Reasoning



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Observation**

According to Alburt Bandura's principle people learn from the observation and for this observation most part is dependent on others. They observe they way of life and acquire it. The child observes his mother and acts according to that.

**Culture**

Throughout their generation they give the culture to this present generation. New generation learns it and teaches it to the other generation.

**Apprentice**

There are four steps which the parents have in their life to bring up their child:

1. Manifestation of Dictatorship
2. Manifestation of Power
3. Manifestation of Leniency
4. Manifestation of Ignorance.

Who are the Agents of social familiarization

1. Family
2. Peer Groups
3. Media
4. Religions
5. Schools

## Conclusion

A person gets the formation from the family & lives in the society. This will lead him to live a good life and at the same time he can live in an



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

opposite way. Parents should be vigilant enough in bringing up their children.

There are two different families

A family which practises good moral values and

A family which practises Immoral values.

Family is the first one in the social familiarization. The responsibility falls on the parents in bringing up their children in a moral way. Parents must be an example for their children. In this modern world parents must be an example for their children. In this modern world parents should spent their time with their children. Then only they can know their children very well.

When parents follow these ways then the family and society will flourish.




இறையியல் கோலங்கள் வாசகர்கள் அனைவருக்கும் எம் இனிய நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 120/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 16
Euro 14

தனிப்பிரதி 55/=

தொடர்பு கொள்க:
**இறையியல் கோலங்கள்**
தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2482, 021 222 7145

# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Half - Yearly
Annual Subscription : Local (Incl.postage) Rs. 120/=
Foreign (Incl.postage) U.S.$ 16
Euro 14
Single Copy Rs.55/=

Correspondence to:
**Irai Iyal Kolangal**
St.Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel : 021 222 2482, 021 222 7145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org